MASTER NEGATIVE NUMBER

6155.22

ஊழியன்
மலர் 10, இதழ் 27
March 25, 1930

Record no. 148

Ūḻiyaṉ

Malar 10, itaḻ 27

March 25, 1930

Record no. 148

சென்னை பதிவு எண் கருஂக. கஉ-பக்கங்கள். தந்தி விலாசம்:—"ஊழியன்"

சந்தா விபரம்.
வருடச் சந்தா ... [illegible]
ஆறுமாதச் சந்தா ... [illegible]
வெளிநாடு வருடச்சந்தா ... [illegible]

விளம்பர விகிதம்.
[illegible]

ஊழியன்

The "Oolian," a Nationalist Weekly.

ஆசிரியன்—ராய. சொக்கலிங்கன்.

நல்லவை வாழ்க! அல்லவை ஆழ்க!

மலர். கo. } காரைக்குடி, சுக்கில-ஹு பங்குனி-மீ கஉ-உ செவ்வாய்க்கிழமை. { இதழ் ௨எ

மலர்மணம்.

சீர்திருத்த தத்துவம்.

(தி. ஐ. ர.)

எந்தக் காரியத்தைத் துவங்கினாலும், நோக்கமும், தேவையும், தெளிவும் வேண்டும். தேவையின்றி, நல்லதொரு செயலிடையாது. நோக்கம் தெளிவாகவிருக்கவில்லையாயின், செயல் சிதைந்துபோகும். ஜன சமூகத்திலே பற்பல சீர்திருத்தங்கள் வேண்டுமென நாம் ஆசைப்படுகிறோம். அதன் காரணமென்ன? நமது நோக்கமென்ன? இளமை மணம் கூடாது; பெண்களுக்குச் சமசுதந்திரம் வேண்டும்; காதல் மணத்திற்கு ஆதரவு வேண்டும்; எல்லா மனிதர்களுக்கும், சமமான சந்தர்ப்பங்கள் வேண்டும்; பிறப்புக்கொண்டு, எவனையும் ஆழ்ந்த பாதலத்திலே தள்ளிவிடக் கூடாது—இவை யெல்லாம், சீர்திருத்தக்காரரது ஆசைகள்; இவற்றிற்காகவெல்லாம் உழைப்பதைத் தம் கடனென அவர்கள் மேற்போட்டுக் கொண்டுளார்கள்.

* * *

இவ்விஷயங்களெல்லாம் எதற்காக? இவை யெல்லாம் சாதிக்கப்பட வேண்டும் என்று சீர்திருத்தக்காரர் ஆசைப்படுவதன் காரணமென்ன? ஜன சமூகத்தின் வாழ்விலே, ஒரு களிப்பும், இன்பமும் பெருக்கெடுக்க வேண்டும் என்ற ஆர்வந்தான், இவற்றிற்கெல்லாம் மூலகாரணம். ஒருவனும் ஒருத்தியும், வயதுவந்து, வாழ்விலே நுழையத் தகுந்தவராகி, பரஸ்பரம் மனங்கவரப்பெற்று, இருவரும் ஒருங்கு சேர்ந்து இல்வாழ்வு நடத்த மனங்கொள்ளுவார்களானால், அதற்குக் குறுக்கே பல சங்கடங்கள் நிற்கின்றன; அது கூடாது—இது சீர்திருத்தக்காரர் கருத்து.

* * *

ஒருவன் ஒரு தாய் தந்தைக்குப் பிறந்த காரணத்தினால், சில வசதிகளற்று, சமூக வாழ்க்கையிலே தாழ்த்தப்படுகிறான். ஆனால், உண்மையிலே, அவனுக்குப் பற்பல வசதிகள் அளிக்கப்படுமாயின், அவன் மிக உன்னதமான பதவிக்குத் தகுந்தவனாகவிருப்பதைக் கூடக் காணவியல்கின்றது. ஜன சமூகவாழ்வை நெறிப்படுத்தப்பயன்பெறும் சாதனங்களான சில அறக்கோட்பாடுகள், அவனுக்கு இயற்கை யளித்த தன்மைகளையும் திறமையையும் தகுதிகளையும் ஓராமல், சிறிதும் அவைபற்றிக் கவலை கொள்ளாமல், அவனை நெருக்கிப்பிடித்து, அமுத்திவிடுவதைக் கண்டு சீர்திருத்த வாதிகள் மனம் தாள முடிவதில்லை.

* * *

இவை போன்றதே இன்னம் ஒவ்வொன்றும், சமூகச் சீர்திருத்த எண்ணம் மனிதருக்கு உண்டாவதன் காரணம், மனிதரிடையே நிலவிவரும் சில வழக்கம், தனி நபர்கள் பலரது சுதந்திரத்தைப் பறிமுதல் செய்து, இன்பத்தைக் குலைத்து, உயர்ந்தெழும் மார்க்கத்தையடைத்து, வாழ்விலே அவர்களைத் துன்பம் அனுபவிக்கச்செய்கின்றதென்ற உணர்வு எழுவதினாலேதான். மனிதரது அறிவும் உணர்வும் மந்தமுறச் செய்வதெனச் சீர்திருத்தக்காரர் கருத்துக்குப் புலப்படுவன அழியவேண்டுமென்பது அவர் ஆசை.

* * *

உண்மையான சீர்திருத்தங்களின் நோக்கம் மனிதவாழ்வை இன்பமும் அறிவும் வலிமையும் பெருகிய தாக்குவதே. எனவே, மனிதர் யாவரும் நல்வாழ்வு பெறவேண்டுமென்று எவர் நினைக்கவில்லையோ, மனிதர் யாவரும் அறிவும் ஆனந்தமும் அடையவேண்டுமென்று எவர் கருதவில்லையோ, மனிதர்களுக்குள்ளே பகைமையைவிதைக்க எவர் மனந் துணிகின்றாரோ, மனிதர் அறிவையும் அழகையும் போற்றிவளர்க்க வேண்டாமென்ற கருத்துக்கள் எவரால் பிரபலமடைகின்றனவோ, தகுதிக்கும் பெருமைக்கும் மதிப்புச் செலுத்தவேண்டாமென்ற உணர்வு எவரால் ஜனங்களிடம் பரவிவிடுகிறதோ, எவரால் மனிதர்களுக்குள் சகிப்புத்தன்மை குறைந்துபோகின்றதோ அந்த மனிதர் உண்மையான சீர்திருத்தக்காரரல்லர். உண்மையிலே அவர் ஜனங்களுக்குள்ளே சந்தோஷம் பெருகும் வழியைக் காட்டுபவரல்லர். ஆத்திரம், மனக்கசப்பு, குரோதம், பொறாமை ஆகிய தன்மைகள் தங்களிடம் பரப்பப் பெறுவதால் ஜனங்கள் எவ்வாறு களிப்புடனும், அமைதியுடனும் வாழ முடியும்?

* * *

நமது சீர்திருத்த ஆர்வம், பொறாமையாய், குரோதமாய், மனக்கசப்பாய்ப் பரிணமித்து விடக்கூடிய ஆபத்து எப்பொழுதும் உண்டு. ஏன்? நமது திருத்தம், சரியோ தவறோ, மூடத்தனத்தாலோ அறிவுத் திறமையாலோ தோன்றி நிலவிவரும் வழக்கமொன்றை மாற்றவிரும்பும் ஆசையாகும். வழக்கத்திற்கு ஓர் பெருத்த சக்தியுண்டு. ஜனசமூக தத்துவ ஆராய்ச்சியாளர் எவரும் இதனை அங்கீகரித்திருக்கின்றார். வழக்கம் ஓர் வலிமை பெறுகின்றது. வழக்கமொன்றை உடைக்கும் முயற்சி தோன்றும்பொழுது, பலமான எதிர்ப்பு உண்டாகாமலிராது. ஜனசமூகத்தைத் திருத்துதல் நமது சொந்தக்காரியமல்ல. கடவுளிடம்—அல்லதுஇயற்கையிடம் என்று வைத்துக்கொள்ளுங்களேன்—அதற்காக நாம் அதிகாரப் பத்திரம் வாங்கி வந்திருக்கவில்லை. நமது சீர்திருத்தக் கடமை நாமாக ஏற்றுக்கொண்டது. ஜனங்களுக்கு நம்மிடம் இஷ்டமில்லையாயின், நம்மை எட்ட ஒதுக்கித் தள்ளிவிட அவர்களுக்கு உரிமையுண்டு. நாம் போராடுவதே, உரிமைக்கும் வாழ்விலே இன்பம் காண்பதற்குமல்லவா?

* * *

மனிதர்களின் திரள் வாழ்விலே வேரூன்றிப் போயிருக்கக்கூடிய சில வழக்கங்களை முறித்தெறிந்து, இனிப்புடைய சில புது முறைகளைக் கைக்கொள்ள அவர்க்கு விண்ணப்பித்துக் கொள்ளுவதுதான் சீர்திருத்த வாதியர் வேண்டுகோளாயிருக்கவேண்டும்; அவற்றை அவர் ஏற்கும்படி செய்யும் நேரிய முயற்சிகள்தான் அவரது பணியாயிருத்தல் வேண்டும். சீர்திருத்தவாதி தமக்கு எந்தத் தனி மனிதரிடமும் கோஷ்டியிடமும் பகைமையில்லையா வென்பதை உள்ளப் பரிசோதனையால் ஒவ்வொரு விநாடியும் தமக்குத் தாமே நிச்சயித்துக் கொள்ளவேண்டும். தமது சொல்லாலும், செயலாலும் அதனை வெளியுலகிற்கும் நிரூபித்துக் காட்டவேண்டும்.

* * *

தமது திட்டங்களாலே, மனிதர் க்ஷேமமாக, மங்களமாக, இன்புற்று வாழவியலும் என்பதைப் பிரத்தியட்சமாக விளக்குவதே சீர்திருத்தக்காரரின் முயற்சியாக விருக்க வேண்டும். சமூகச் சீர்திருத்த வாதிகள் எவரெவர் தம் கொள்கைக்கு இணங்கிவருகின்றார்களோ அவர்களையெல்லாம் இணைத்து, தம் முயற்சிகளுக்கு ஆக்கந்தேடிக் கொள்ளுதல் மிக மிக அவசியந்தான். ஆனால், சீர்திருத்த வாதிகளின் கோஷ்டியை, அதன் நன்மையை யுணர்ந்துகொள்ளாத ஏனையோர், தங்கள் பகைவராகக் கருதுமாறு அக்கோஷ்டியின் இயக்கம் செல்லலாகாது.

* * *

எத்தனையோ பொருள்கள் சீர்திருத்தத்தில் நுழைகின்றன. ஆனால், அவை யாவும், மிக மேலான எண்ணம் படைத்த யாவராலும் ஒத்த அபிப்பிராயங்கள் கொள்ளக்கூடியனவாயிருப்பதில்லை. இங்ஙனமாக, சீர்திருத்தக்காரர்கள், மிகமிகத் தேவையானது சகிப்புத் தன்மையே என்று உணர வேண்டும். விக்கிரக வணக்கத்தை எடுத்துக்கொள்ளலாம். விக்கிரக வணக்கத்தை ஆதரிப்பவர்கள் மனங்குவிய ஓர் பாவனை வேண்டுமென அதனை விரும்புகின்றார். ஆனால், அது தேவையல்ல, பயனற்றது என்று இன்னோர் சாரார் கருதுகின்றார். மனங் குவிந்து தூய்மைபெறப் பரிசுத்த வாழ்வும், பரிசுத்த எண்ணமும், பரிசுத்த நடத்தையுமே தேவையென்ற கருத்துடையோரிவர். இருவர் விருப்பமும், மனிதனது இதயம் புனிதமடைய வேண்டுமென்பதேதான். இரண்டிலொன்றே உண்மையில் நிச்சயமும் உயர்ந்ததுமாயிருக்கவுங்கூடும். இதற்காக ஒருவர் மற்றவரை மூடரென்றோ மூர்க்கரென்றோ எளிதாய்ப் பழித்து விடுவதாற் பயனில்லை. ஆனால் இந்த முரட்டுப்பேச்சால் எல்லாம் தீமைதான். விக்கிரக வணக்கக்காரர் மற்றவரைச் சகித்துக் கொள்ளா விட்டால், புதிய தத்துவம் பேசும் மற்றவர் அவரைச் சகித்துக் கொள்ள மறுப்பதும் குற்றம் கூறத் தக்கதுதான். ஆத்திரமும், அகந்தையுமுடையவர் எவரானாலும் அவரால் மனித வருக்கம் சுகமடையாது. அழகிய திட்டங்கள், வசீகரநடத்தை, பணிந்த கருத்து வெளியீடு—இனிய சொற்கள், இவைதான் சீர்திருத்தமலர் எதற்கும் மணமும் நிறமும் குணமும் நல்குவன. மணமும், நிறமும், குணமும் படைத்த மலர்களை நாடி வருபவரைத் தேடியலைய வேண்டியதில்லையல்லவா?

—

இந்திய மங்கயைர் இயக்கம்.

வனிதையின் வாரக் குறிப்புகள்.

[ஸ்ரீமதி சாரதை எல். எம். பீ.]

("மாங்கல்ய பேதம்" என்ற நாடகத்தின் கதாநாயகி.)

நான் யாரென்றறிய வேண்டுமென்று "ஊழியன்" நேயர்களில் அநேகம் பேர் விரும்புவதாக அறிந்தேன். நான் உயிருள்ளவனிதைதாஞ அல்லது ஓர் 'ஆண்டி'யின் கற்பனைப்பொருளோ என்றும் பலர் சங்கை கொண்டிருப்பதாக அறிகிறேன்.

* * *

என் வரலாற்றை வேண்டுமென்ருல் கேளுங்கள். நான் ஓர் ஸ்மார்த்த பிராம்மணவனிதை. இருபத்திரண்டு வயதாயிற்று. என் ஆதி பர்த்தா ஒரு சீமை பாரிஸ்டர். அவர் சற்று நெறி வழுவி நடந்தமையால் நான் அவரைத் திரஸ்கரித்துவிட்டுப் 'பிச்சை' என்ற வேறொரு புமானைக் கல்யாணம்செய்து கொண்டேன். இந்து சட்டப்படி என் செய்கை ஓர் குற்றமாகக் கணிக்கப் பட்டிருப்பதால் என்னைக் கைது செய்து எனக்கு ஏழு வருஷக் கடுங்காவல் விதித்திருக்கிருர்கள். அதன்படி இப்பொழுது நான் சிறைவாசம்செய்து வருகிறேன். என்னுடைய இரண்டாவது கணவரும் உன்னைப்போல் சிறையில் வைக்கப்பட்டிருக்கிருர். இதுவே என் ஜீவசரித்திரம்.

* * *

தன்பர்த்தாவைத் திரஸ்கரிக்க ஓர்வனிதைக்கு அதிகாரமுண்டாஎன்று இந்து சட்டம்என்னைக் கேட்கின்றது. "ஏனில்லை?" என்று யானதையும் உங்களையும் கேட்கிறேன். வேசியை அணுகிய புருஷன் வேந்தனுயிருப்பினும் எனக்கு வேண்டுவதில்லை! மேனகையாயினும் வேசி மேகரோகக் களஞ்சியம் தான். ஒருபாவமு மறியாத என் சந்ததிக்குப் பிதா அந்தரோகத்தை உட்கொண்ட மாபாவியோ?

* * *

என் வரலாற்றைப்பற்றி இனித்தயவு செய்து நீங்கள் என்னிடம் கேட்கக் கூடாது. என்மனதை அது மிகுந்த சஞ்சலப்படுத்துகின்றது. எனக்குள் நான் உண்மையாயிருக்க வேண்டுமேயன்றி உலகத்தாரை எதிர்பார்த்து நடக்க வேண்டியதில்லை. இவ்வுலகமும் அதை ஆண்டிடும் ஆடவரியற்றிய சட்டமும் என்போன்ற வனிதைகளைக் கஷ்டப்படுத்துவதை அறிந்த நான் இன்னும் அவைகளை மதிப்பேனே? கடவுளருளால் மற்ற மாதர்களும் நாளுக்கு நாள் கண்விழித்துக் கொண்டுதான் வருகிருர்களாகையால் இவ்வாடவ நீதியின் கொடுங்கோன்மைக்குச் சாவுமணி கேட்க ஆரம்பித்துவிட்டது.

* * *

எப். சீ. எஸ் பரீக்ஷையில் வெற்றி பெற்றவர்களின் ஜாப்தா சென்ற வாரம் பிரசுரிக்கப்பட்டது. அதில் ஆறுபேர்கள் சென்னைமாகாணத்தைச் சார்ந்தவர்களும், ஒருவன் வங்காளியும், ஒருவன் பஞ்சாபியும், மீதி ஒருவன் ஐக்கியமாகாணத்தானும் அவர்கள். சென்னை மாகாணத்தைச் சார்ந்த எனக்கு இது ஒருவித அகமகிழ்ச்சியைக் கொடுக்கின்றதாயினும், என்னினத்தைச் சார்ந்த ஒருத்தி அதிலில்லாததுபற்றி மனவருத்த மேற்படுகின்றது. எங்களினத்தாரையும் பரீக்ஷையிற் சேர அனுமதித்திருந்தாலன்ருே அவர்களிலிருந்தும் சில நபர்களை ஜாப்தாவிற் காணலாம்! அந்தோ! எப். சீ. எஸ். என்றது பெண்கள் கற்கக் கூடாத அவ்வளவு ஆபாசப் பரீக்ஷை போலும்!

* * *

சாரதா சட்டத்துக்குப் பயந்து குழந்தைக் கல்யாணங்கள் தடபுடலாக நடைபெறுகின்றனவாம். சனாதனதர்மிகளுடைய ஆத்திரம் அவர்களுடைய புத்தியையும் மழுங்கச் செய்திருக்கிறது. சென்ற வாரத்தில் இரண்டரை வயதுப் பெண்ணுக்கு இருபத்தைந்து வயதுடைய வரனேற்பட்டதைப்பற்றியும், பதினைந்து வயதுப் பெண்ணுக்கு அறுபது வயது புருஷனேற்பட்டதையும், மருகியை மணக்க மாமன் முன் வந்திருப்பதையும் பற்றிக் குறிப்பிட்டிருந்தேனன்ருே? இவ்வாரம் மற்ருேர் புதுமைகூடத் தோன்றியிருக்கிறது. ஒரு வர்ணாசிரமப் பிதா தன் பச்சிளம் குழந்தைக்குப் புருஷன் கிடையாமல் ஒரு மனைவியும் இரண்டு குழந்தைகளுமுடைய நாற்பது வயதுத் தடியனுக்கு மணம் செய்வித்துக் கொடுத்துவிட்டானும்! ஒரு அற்பத் தொகைக்கு பிராமிசரி நோட்டெழுதிக் கொடுப்பதற்குக்கூடப் பதினெட்டு வயது நிகையவேண்டுமென்று சட்டமியற்றியிருக்கும் நமது அரசாங்கம் விவாஹமென்ற ஆயிரங் காலத்துப் பயிருக்கு மாத்திரம் பதினாலாக்கியிருப்பதன் கருத்தை என்னால் அறியவே முடியவில்லை.

* * *

திருவிதாங்கூர்சமஸ்தானத்திலுள்ள ஒரு விசித்திரத்தைக் கேளுங்கள். பெண்கள் ராஜ்யத்தை ஆளலாம்; உயர்தர உத்தியோகங்கள் பெறலாம்; சட்டசபையிலிருந்து சட்டமியற்றலாம்; கல்விச் சாலையில் உயர்தர ஆசிரியை யாகலாம்; உயர்தர டாக்டராகலாம்; ஆனால் முனிசிபாலிட்டிகளில் மாத்திரம் மெம்பராகக் கூடாதாம்! கோள நாடு பெண்கள் நாடாயிருப்பினும் அங்குள்ள நகரசபைகளாவது ஆண் முனிசிபாலிட்டிகளாக விளங்குகின்றதே!

* * *

நேபாள மாதொருத்தி மானத்தை அழித்த அக்கிரமியைக் கொலைசெய்து, தானும் சிறைசென்று, மீண்டும் திரும்பிவந்த கரக்பகுதூர் சிங் என்ற நேபாள வாலிபனும் மகாத்மாவுடன் சத்தியாக்கிரகம் செய்யப் போய்விட்டதாக இன்று காலையில் எனது சிறைச்சாலை அதிகாரி தெரிவித்தார். எனக்கு இன்றைக்கு ஒரு தினத்திற்கு மாத்திரம் கடவுள் இரு சிறகுகள் தருவாராயின் நான் பறந்துசென்று அவ்விரு மகாத்மாக்களும் ஒன்றுசேர்ந்து நடந்து செல்வதைக் கண்ணாரப்பார்த்துவிட்டு மறுபடியும் இச்சிறைச் சாலைக்குள் வந்து அடைந்துவிடுவேன்! இச்சந்தர்ப்பத்தில் மகாத்மாவுடன் தாமும் சேருவதற்கில்லையே யென்று வருந்திடும் என்னிரண்டாம் கணவராகிய "பிச்சை"யின் இதயம் எனக்கடுத்த சிறைச்சாலை அறைக்குள்ளிருந்து துடிதுடிப்பது இதோ என்னிரு காதுகளையும் துளைக்கின்றது!

* * *

இந்திய சர்க்கார் சனாதனதர்மக்கக்ஷியிடம் கொஞ்சம் பிரணய லீலை செய்கிறதாக ஒரு குருவிவந்து என் காதில் ஊதுகிறது. ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரியார்தான் அவர்களுக்கிடையில் தூதுவாதுகொண்டு சென்றிடும் நடுஆளாயிருக்கிருராம். கவர்மென்ருருடைய ரகசியநோக்கங்களுக்குச் சனாதனதர்மக்கக்ஷி இசைந்திடுமாயின் அவர்கள் விவாஹவயதைப் பதினாலிலிருந்து பனிரண்டாகத்தாழ்த்துவதாகசர்க்கார் ஒப்புக்கொண் டிருக்கிருர்களென்று ஸ்ரீ ஆச்சாரியார் பெருமைபேசிக்கொள்கிருராம். அது எப்படிப் போயினும் சனாதன தர்மக் கக்ஷியாரின் கற்பாகிய சுதந்திரத்திற்கு ஸ்ரீ ஆச்சாரியார் உலைவைத்துவிட்டார் என்பது திண்ணம்!

மாங்கல்யபேதம்

அல்லது

இரட்டை நீதி.

ஓர் சமுதாய நாடகம்.

[ஆண்டி.]

(சென்றவாரத் தொடர்ச்சி.)

கிட்டு:— நீ பேசினது போருமுடா!— அவாளெல்லாரும் நம்மைத் திரும்பித் திருப்பிப் பார்க்கருள்— ஒன்னொட மலையாளப் பேச்சைக் கேட்டா நேக்கே கொறச்சலாருக்கு! என்ன இல்லையானாலும் பாஷை சுத்தம் வேண்டாமோ? மூக்காலேம் பேசிக்குண்டு!—போ, போ! அங்கை யெங்கேம் போயிருதன்னி! ஒங்கிட்டெ யிருந்தா என்னேன் மலையாளத்தான் இன்னு நெனச்சுடப்போரு!

சுப்பாராயன்:—ஒரு மின்னிட்டு ஸ்வாமி! இவருடெ காஸு பூஜு வாஷையும் இவிடத்தெ தமிழுவாஷையும் ஒன்றும் மனஸிலாகறதில்லெ நமக்கு. நீகேஸு எதுமட்டிவிருக்கும்? ஸுருக்கத்திலெ ஸொல்லணம் ஸாமி.

கிட்டு:—ஸாக்ஷி விஸ்தாரம், தெளிவு எல்லாந்தீர்ந்து, ஈறங்கியிலேயும் பாதியாயாச்சே.

சுப்பராய:—நம்மட பிச்செஸாமிக்கு வக்கீலு எவிடெ? ஸாரதாம்பாளுடெ வக்கீலு புனுடி காணத்தில்லெ!

கிட்டு:—அவா தாங் குத்தத்தை ஒப்புக்கொண்டு வக்கீலே வேண்டாமுன்னுட்டாளே! இந்தச் சட்டமே அவத்தச் சட்டமாம், அதையே மாத்தணும் இன்னுட்டன்ன அவா கல்யாணம் பண்ணிக்குண்டாளாம்!

சுப்பராய:—வாறிஸ்தருக்கு வக்கீலு?

கிட்டு:—அதோ அவங்கிட்டெப் பேசிக்குண்டிருக்காரே, அந்த சர்க்கார் வக்கீல் தான்—ஆயிரத்திச்சில்வானம் ரூவாய் சம்பளமுண்டாம் அவுருக்கு! நம்மவூரெப் போல எறநூறு எறநூத்தம்பதுக்கு ராத்தம் போடறவரல்ல!—இல்லாட்டாலும் சுந்தரமே பெரிய வக்கீல்தானே—பாரிஸ்டர் இன்னு சொன்னாலே பெரிய வக்கீல் இன்னுதானே அர்த்தமாம்!

சுந்தரம்:—ஜோஸ்யரவாள்!

கிட்டு:—(அவனருகிற் சென்று) என்ன?

சுந்தரம்:—ஒரு கலர் உடைத்துக்கொண்டு வாரும்.

கிட்டு:—ஆகட்டும் (விரைந்து வெளியே போகிருர்)

சுப்பராய:—நவஸ்கார, வாறிஸ்த ஸ்வாமி!

சுந்தரம்:—(தலையசைத்து விட்டுப் புஸ்தகஸ்தகத்தைப் பார்க்கிருன்)

கிட்டு:—(ஒரு குப்பி லமனேடுடன் வந்து சுந்தரத்தினிடம் கொடுக்கிருர்) [இதற்குள் ஜட்ஜி பிரவேசித்து, தம் உயர்ந்த ஆசனத்திலமருகிருர். ஜூரிகள் அனைவரும் பிரவேசித்து அவர்களுடைய ஆசனங்களிலமர்கின்றனர். வக்கீல்களும் குமஸ்தாக்களும் ரிப்போர்ட்டர்களும் எழுந்து நின்று ஜட்ஜியை வந்தனம் செய்துவிட்டுத் தங்கள் ஆசனங்களிலமர்ந்து கவனிக்கின்றனர்.]

ஜட்ஜி:— Now, Gentle-men, shall we proceed? (கனவான்களே! இனித் துவங்கலாமா?)

ஜூரித்தலைவர்:—yes your honour [சரி கனம், நீதிபதியவர்களே] வாதிபட்சம் வக்கீலுடைய முடிவுரையைக் கேட்கச் சித்தமாயிருக்கிறோம்.

ஜட்ஜி:—ஸர்க்கார் வக்கீலைத் தம்முடைய முடிவுரையையும் பேசும்படி அழைக்கிறேன்.

சர்க்கார்வக்கீல்:—Thanks your honour [வந்தனம், கனம். நீதிபதியவர்களே] இந்த முடிவுரையைப் பேசுவதற்கு மாத்திரம் என்னைவிட யோக்கியதை அதிகமுள்ள வாதியாகிய பாரிஸ்டர் ஸ்ரீ சுந்தரமய்யருக்கு அனுமதியளிக்க வேண்டுமென்று கோர்ட்டாரைக் கேட்டுக்கொள்கின்றேன்.

ஜட்ஜ்:— சந்தேகமின்றி வாஸ்தவத்தில் நீரே அவருடைய பிரதிநிதியாயிருக்க அவரே விரும்பும்போது அவருக்குப் பேச அதிகாரம் கொடுப்பது அவருரிமையை அளிப்பதென்றே என்கருத்து.

சுந்தரம்:—[எழுந்து] கோர்ட்டாருக்கு வந்தனம். கனமிகுந்த கோர்ட்டாரே! இவ்வழக்கு சம்பந்தமாக ஏற்பட்ட வாதங்கள் அனைத்தையும் சர்க்கார் வக்கீலே விவரமாக விளக்கியிருப்பதோடு அவராலியன்ற மட்டிலும் கோர்ட்டாருக்கு என் துன்பம் மனதில் பதியும்படியும் முயற்சித்திருக்கிருர். பிரதிவாதிகளுடைய வாக்கு மூலங்களையும் அறிக்கைகளையும் இக்கோர்ட்டிலேயே சமர்ப்பிக்கப்பட்ட மற்ற சாக்ஷியங்களையும் அவர் அடிஸ்தானமாக்கியிருக்கிருரேயன்றி வேறு வெளியே செல்லவில்லை. சில விடங்களில் அவர் கடுத்த மொழிகளை உபயோகப்படுத்தியிருக்கிருராயினும் அவைகளையெல்லாம் நன்ருக யோசனை செய்தே கூறியிருக்கிறாரென்பது என் கருத்து. என்னைக்கேட்டால் அவர் பிரதிவாதிகளைப்பற்றிய வரையிலும் உரைத்த வார்த்தைகளுக்கு ஊக்கம் போதாது என்பேன். எதிரிகளிடமிருந்து தங்களாலியலாத தர்ம நியாயமான நடக்கையை எதிர்பார்க்க முடியாதென்பதை ஏற்றுக்கொள்ளுகிறேன். ஆனால் அவர்கள் வேண்டுமென்றே துணிந்தியற்றிய குற்றத்தை மறப்பதெப்படி? ஆகவே அவர்களைத் தக்கபடி சிக்ஷிக்க வேண்டுமென்று நான் விரும்புவதற்குக் காரணம் எனக்கவர்கள் மீதிருக்கும் பகையேயல்ல; இனி எதிர்காலத்தவர்களாவது இந்த முதுமையுடைய புண்ணிய விவாஹச் சடங்கைப் பரிசுத்த மனதுடன் வெகுமதி செய்யவேண்டும் என்ற நல்நோக்கமேயாகும்.

பிச்சை:—அப்பா!—என்ன பரிசுத்த குணங்களின் அவதாரமவர்!

சுந்தரம்:— கனமிகுந்த கோர்ட்டாரே! சர்க்கார் வக்கீல் பேசியதிலிருந்து கூடுதலாக யான் ஒன்றுமே குறிப்பிடப்போவதில்லை. அவர் சொன்ன வாதங்களுக்கு முடிவுரை மாத்திரந்தான் கூறப்போகின்றேன். அதுவும் கூட இக்கோர்ட்டாரின் நற்குணத்தாலும் எதிரிகளுடைய நாணமற்ற பஹிரங்கப் பழியேற்றலாலும் இலகுவாக்கப்பட்டுவிட்டுவிட்டது. முதலாவது எதிரியுடன் நடந்த என்னுடைய விவாஹம் நியாயமானதே யென்பதை இதுவரையிலும் யாரும் மறுக்கவில்லை. இரண்டாம் விவாஹம் இரண்டாவது எதிரியுடன் சிங்கப் பெருமான் சந்நிதியில் சாஸ்திரப்படி நடந்தேறியது என்றதையும் எதிரிகளும் சர்க்கார் சார்பாக இங்கு சாக்ஷியம் கூறிய பூஜாரி புரோகிதர் இவர்களும் ஏற்றுக்கொண்டு விட்டார்கள். இரண்டாம் விவாஹ சமயத்திலும் இன்னும் கூட நான் உயிருடனிருக்கும் விஷயம் எதிரிகளுக்கு நன்ருய்த் தெரியுமென்பதும் அவர்கள் விடுத்த அறிக்கையிலிருந்து வெளியாயிருக்கிறது. இவர்களைப் பிராசிக்யூட்செய்ய அதிகாரமுடையவனும் இவர்களால் அவமானம் விளைவிக்கப்பட்டவனு மாகிய நானே பொலீசாரிடம் தெரிவித்துக் கேஸை நடத்துகிறேன் என்பதும் கண்கூடு. இவைகளையன்றி இன்னும் யாது வேண்டும் சடுசு-வது பிரிவின்படி இவர்களை இரட்டை விவாஹக் குற்றத்திற்காகத் தண்டிப்பற்கு? எதிரிகள் தம்மையறியாமலோ ஏமார்ந்தோ இக்குற்றத்தை யியற்றினர்களென்றும் சொல்வதற்கில்லை. "வேண்டு மென்றே இக்குற்றம் செய்திருக்கிறோம்" என்று தாங்கள் பின்னால் விடுத்த விளம்பரங்களிலும் வாக்குமூலங்களிலும் அறிக்கைகளிலும் அவர்கள் அழுத்தமாகக் கூறியிருக்கின்றனர். மேலும் இந்த விவாஹம் திடீரென்று தோன்றிய ஒரு எண்ணமோ, அல்லது பொறுக்க முடியாத மனத்துயரத்தின் ஆதிக்கத்தாலேற்பட்டதோ என்றும் சொல்வதற்கில்லை. தீர்க்காலோசனையுடனும், என்னை அவமதிக்கவேண்டு மென்ற திரெண்ணத்துடனும், காமப்பித்துடனுமியற்றிய குற்றமேயாகும்!

சாரதா:— இல்லை-காமப்பித்தே யில்லை!-காமப்பித்துத் தம்மிடம் தான்!

சுந்தரம்:— கனம் பொருந்திய கோர்ட்டாரே! என் தேகத்தில் [illegible] களிருக்கின்றன வென்றும் அதுவே [illegible] கேவலமான செய்கைக்குள்ள [illegible] மென்றும் சாற்றுகின்றனர். அந்[illegible] பத்திரமாக இரண்டு வருடங்களுக்கு [illegible] புன்ன ஒருபாரிஸ் [illegible] கல் செய்திருக்கிருர்கள். ஆனால் [illegible] டின்முன்ன தாகவா [illegible] அனாட்ஜன் உயர்தர டாக்டர்களும் [illegible] என்தேகத்தில் இந்நோய் [illegible] யிருக்கின்றனவா இல்லையா என்ற [illegible] யத்திலும் இருந்தாலும் [illegible] திகளைப் பாதிக்குமா என்ற [illegible] பின்னு பிப்பிராயமுடையவர்களா [illegible] கின்றனர். ஆகவே எதிரிகளுடைய [illegible] இம்மட்டுத்தான். "நான் கெட்ட [illegible] புடையவனு யிருந்திருக்கலாம். [illegible] யிருந்தால் எனக்குள் மேகரோக [illegible] இன்னும் தங்கி யிருக்கலாம், [illegible] மிருக்கலாம். ஒருவேளை [illegible] என்சந்ததியை அது பாதிக்கலாம், பாதிக்காமலும் போகலாம்" இவ்வளவு [illegible] ஆறும் ஆகலாமுமுள்ள ஓர் [illegible] திற்கா, விவாஹமென்ற [illegible] புண்ணியக் கோட்பாடு [illegible] வந்த கீழ்த்தரவைத்திய [illegible] டைய சந்தேகத்தின் தோற்றத்திற்கா இவ்விதம் அவமதிக்கப்படவோ!

சாரதா:— நீர் என்ன செய்திருப்பீர் உம்மைப்போல் யாரும் [illegible] தால்!-நீர் அன்னிய மாதரிடம் [illegible] போல் வேறெருவன் என்னிடம் [illegible] ருந்தால்?

சுந்தரம்:— நீ பெண், நான் ஆண். அதுவே பதிலுனக்கு!

வெளியாரிட மிருந்து:— Shame! Shame! [வெட்கம்! வெட்கம்!!]

சாரதா:— கனவான்களே! நீங்களும் அங்கீகரித்து இந்தகைய இழிவான நடைக் கற்பு நீதியை [illegible] தீர்களா? ஆடவர்கள் கெட்ட நடக்கைக்கு லைசன்ஸ் பெற்றிருக்கின்றனரோ? [illegible] களே புகலப்பீர், கனவான்களே! இவருடைய கெட்டநடக்கையைப் பற்றிக் கேட்க எனக்கு இவ்வளவுகூட அதிகாரமில்லையாயின் இதோ என்னுயிரைக் [illegible] தாக்கியெடுத்து அதனை வெளக்கியித்த [illegible] தரின் முகத்திலேயே வீசியெறிவேன்!— [Hear! Hear! "கேளுங்கள், கேளுங்கள்" என்ற முழக்கம்]

சுந்தரம்:— கோர்ட்டாரே! [illegible] யகன்னியின் சந்நிதியைப்பற்றி [illegible] செய்கின்றேன். அவைகளை [illegible] கொண்டு யாது வேண்டுமோ செய்யக்கூடு மவள்; செய்யவும் செய்வாள். [illegible] காரணம் புகுந்து உங்கள் நியாயமான தீர்ப்பைப் பாதிக்கலாகாது. மானிகளைப்பற்றித் தங்களிடம் எச்சரிப்பதன் காரணம் யாதெனில், மாதர் மீதுள்ள அபிமானம் எல்லாத் தேசங்களிலும் எக்காலத்திலும் எல்லா விஷயங்களிலும் ஏற்பட்டு நமது தாய், சகோதரி, புதல்வியென்ற பாவனையில் அவர்களைப் பாதுகாக்கக்கூடிய கருணை நியாயஸ்தலத்திலும் புகுந்து விடுகிறது.

ஜட்ஜ்:— ஐயா, சட்டமென்பது இனத்தையும் மனோபாவத்தையும் கவனிக்கக் கூடியதல்ல. அதன் ஒரே கருத்து, துஷ்டநிக்ரஹ சிஷ்ட பரிபாலனமேயாகும். விசுடி பக்ஷபாதமான நியாயத்தை அளிக்கவிட்டால் நாங்களென்றும் இருக்கிறோமிங்கு? சட்டத்தின் முறைகளும் கொள்கைகளும் மானிட சுபாவத்தையும் மானிட தர்மத்தையுமே அடிஸ்தானமாகக் கொண்டவை யென்றும், பரிசுத்த நியாயமும் மானிடவாழ்க்கையின் வேற்றுமையுமுடைய சமூஹ முறைகளும் சேர்ந்துண்டான தொன்று தொட்டுள்ள அறிவின் களஞ்சியமென்றும் நாங்களறிவோம்; ஆனால் சட்டமும்கூடத் தலைபணிய வேண்டிய மானிட சித்தத்திற் கியல்பான சபலாதிக்கிய மேற்படுகிற சந்தர்ப்பங்களும் உண்டு என்பதையும் நாங்கள் அறிந்திருக்கிறோம்.

சுந்தரம்:—என்னை மன்னிக்கவேண்டும். நானிதிலேற்படக்கூடிய இடுக்சலைப்பற்றி ஞாபகமூட்டினேனேயன்றி வேறில்லை. ஆனால் இவ்வழக்கில் ஒருவிதமான அடக்க முடியாத சித்த சாபல்யத்திற்கும் இங்கிற்கும் இடமேயில்லை. அப்படியேதாவது இருக்க வேண்டுமானால் அது எனக்குத்தானிருந்திருக்கவேண்டும். என்னைக் கெடுத்து என் இல்வாழ்க்கையை நாசமாக்கி, நான் அக்னி சாக்ஷியாக மணந்த மனையாளை யபகரித்து, எனக்கெதிரே ஆயுதம் தரித்த பகைவனைப்போல் வந்து தோன்றியிருக்கிறொரு மனிதன்.

(தொடரும்)

சாரதா சட்டம்.

திருத்தப்படுமோ?

சார்தா சட்டத்தை திருத்துதற்கு இந்திய அரசாங்க சபையில் கொண்டுவரப்பட்டிருக்கும் மசோதா வருகிற கோடைகால கூட்டத்திலேயே எடுத்துக்கொள்ளப்படுமாம். இதுபற்றி திரு. எம். கே. ஆசாரியர், அவர் நண்பர்கள், திரு. சாரதா அவர் நண்பர்கள் முதலியோர் வைசிராயைப் பேட்டி கண்டு தங்கள் அபிப்பிராயங்களை அறிவித்துள்ளார். இவை யாவும் அரசாங்கத்தாரால் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகின்றன.

முதல் தேதி அமுலுக்கு வரும்.

சார்தா சட்டம் எப்ரல் முதல் தேதியில் அமுலுக்கு வந்துவிடும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. சட்டத்தை திருத்தினலன்றி எத்தகைய மாறுபாடும் இளமை மணம் சம்பந்தமாகச் செய்ய முடியாது. ஆனல், தற்போது அரசாங்க நிர்வாக சபையிலிருந்து இந்த சட்டம் பற்றிய நடபடிக்கைகளை தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று ஒருபோது அதிகாரிகளுக்கு அறிவிக்கப்படலாம் என்று தெரிகிறது. இது பற்றிய முடிவு இவ்வாரத்திலேயே வெளியாகும் எனவும் சொல்லப்படுகிறது.

ஆச்சாரியர் அபிப்பிராயம்.

சார்தா சட்டத்தை ஒழித்துவிட காப்புக் கட்டிக்கொண்ட திரு. எம். கே. ஆசாரியர் பத்திரிகைப் பிரதிநிதி ஒருவரிடம், தமது திருத்தத்திற்கு அரசாங்கத்தாரோ, அதன் உத்தியோகஸ்தர்களில் எவரோ இணங்கிவிட வில்லை என்றும், கஉ வயதிற்குட்படாத சிறுமிகளை சார்தா சட்டத்தினின்றும் விலக்கி மணஞ் செய்து கொள்ள உரிமையளிக்க வேண்டுமென்பதற்கும், போதிய ஆதரவு அரசாங்கத்தாரிடமிருந்து கிடைத்து விட்டதாகப் பத்திரிகைகளில் வெளிவந்திருப்பது தவறு என்றும் கூறியுள்ளார். ஆனல், வைதிக கோஷ்டியார் இச்சட்டத்தைப் பலமாக எதிர்த்திருக்கும் விஷயம் மட்டும் அரசாங்கத்தார் நன்கு உணர்ந்துவிட்டார்கள் என்று கூறியுள்ளார். எனினும், மிகச் சிறு குழந்தைகளுக்கு அவசரமாக மணம் புரிவித்தல் மிகவும் தவறுனதென்றும் அதற்கு சாஸ்திரமும் மதமும் இடங்கொடுக்கவில்லை என்றும் அவர் கூறினதாகத் தெரிகிறது.

பகிரங்கப்படுத்த.

சார்தாச் சட்டம் எப்ரல் முதல் தேதி முதல் அமுலுக்கு வருகிறது என்ற விபரத்தை 'டாம் டாம்' போட்டு பகிரங்கமாக பொது மக்களுக்கு அறிவிக்க ஒவ்வொரு ஜில்லா கலெக்டரும் ஆர்டர் போட்டிருப்பதாகத்தெரிகிறது.

—

காரைக்குடி நகரசபை.

இன்று (உ௫-௩-௩௦) மாலை ௫ மணிக்கு நடைபெற விருக்கும் முனிசிபல் கூட்டத்தில் ஆலோசிக்கப்படும் முக்கிய விஷயங்கள் வருமாறு:—

அனுதாபத் தீர்மானம்.

மாஜி முனிசிபல் கௌன்சிலர் திரு. லெ. ராம. ராமசாமி செட்டியார் அவர்களும் தற்போதைய முனிசிபல் கௌன்சில் மெம்பராக விருந்த திரு. மெ. செ. சொக்கலிங்கன் செட்டியாரவர்களும் காலகதியடைந்ததற்கு முனிசிப்பாலிட்டியின் அனுதாபத்தை அறிவித்தல்.

இத்தீர்மானம் திரு. சி. மு. அரு. முத்துராமன் செட்டியாரவர்களால் கொண்டுவரப்படும்.

கேள்விகள்.

திரு. ச. பீ. ஈ. மு. முகம்மது இபுராகிம் ராவுத்தரவர்களால் கேட்கப்பட்டுள்ள கேள்விகள்:—

(க) தொழில்வரி அசஸ்மெண்டு லிஸ்டுகள் முன் அந்தந்த வார்டு கௌன்சிலர்களால் பரிசோதனை செய்வதற்கு அனுப்பப்பட்டு அவர்கள் அபிப்பிராயத்தின் பின் வரிகள் விதிக்கப்பட்டு வந்திருக்க, க௯௩௦ மார்ச்சு ௩க-ம் தேதியோடு முடிவாகிற அரைவருஷத்திற்கு இதுவரை கௌன்சிலர் பார்வைக்கு அசஸ்மெண்ட் லிஸ்டுகள் அனுப்பப்படாத காரணம் என்ன?

(உ) ஷெயாரால் க௦-௩-௩௦-உ கடிதத்தில் கேட்கப்பட்டுள்ள I & II கேள்விகள் அனுமதிக்கப் படவில்லை.

(௩) காரைக்குடி தண்ணீர் திட்டம் எந்தநிலையில் இருக்கிறது? அதுசீக்கிரம் நடைபெறுதற்கு என்னன்ன முயற்சிகள் எடுத்துக்கொள்ளப் பட்டன? இன்னும் என்னென்ன எடுத்துக்கொள்ள வேண்டியதிருக்கிறது?

(௪) நமது முனிசிப்பாலிட்டியில் எத்தனைப் பொது கக்கூசுகளும் சொந்தவீடுகளில் கக்கூசுகளும் இருக்கின்றன? சென்ற வருட நிர்வாக அறிக்கையின் பேரில் கவர்மெண்டார் சொல்லியபடி பப்ளிக் கக்கூசு அதிகம் எத்தனை ஏற்பட்டிருக்கிறது? நாளது வருஷம் எப்ரல் மாதத்திலிருந்து எத்தனை பிரைவேட் லட்ரீன்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன?

திரு. கே. குருசாமி அவர்களால் கேட்கப்பட்டிருக்கும் கேள்வி:—

க௯உ௯ பிப்ரவரி க-உ கூடிய முனிசிபல் மீட்டிங்கில் ஒவ்வொரு மாதத்தின் கடைசி செவ்வாய்க்கிழமையில் முனிசிபல் சபை கூட்டவேண்டுமென்று தீர்மானம் நிறைவேறியிருக்க, கடந்த பிப்ரவரி-மீ உ௫-உ யாகிய கடைசி செவ்வாய்க்கிழமை முனிசிபல் மீட்டிங் கூட்டப்படாத காரணம் என்ன?

திரு. ராவ்பகதூர் சு. அ. சு. ராம. ராமநாதன் செட்டியாரவர்கள் கேட்கப்பட்டிருக்கும் கேள்விகள்:—

(சென்றவார ஊழியனில் இவை அன்னரால் அனுப்பப்பட்டபடி வெளியிடப்பட்டிருக்கின்றன.)

கல்லுக்கட்டி கால்வாயை ஒழுங்குப் படுத்த.

"நமது கல்லுக்கட்டி ஊருணிக்குத் தண்ணீர் வரும் மடை சகல பக்கங்களிலும் அதிக ஆபாசம் நிறைந்ததாக விருக்கிறது. தற்போது ரோட் ஓரமாக ஒரு சிறிய மதில் கட்டியபிறகு அதன் மறைவில் எதிரிலும், சமீபத்திலும் இருக்கும் காப்பிக்கிளப்புகளுக்கும், ஹோட்டலுக்கும் வரும் ஜனங்கள் ஆபாசப்படுத்த சௌகரியம் ஏற்பட்டதுபோலிருக்கிறது. இதை நிவர்த்தி செய்யும்பொருட்டு ஒரு கான், ஜலம் தாராளமாய் வரும்படி ௫-அடி அகலத்திலும் க௫௦-அடி நீளத்திலும் கட்டி பாக்கி ஜாகைக்கு மண் போட்டு உயர்த்தினல் அந்த ஜாகை முனிசிப்பாலிட்டிக்கு அதிகப் பிரயோசனமாகவிருக்கும். இந்த வேலைகள் நிறைவேற எஸ்டிமேட்டு தயாரித்து கௌன்சில் அனுமதிக்குக் கொண்டுவர இந்தக் கௌன்சில் தீர்மானிக்கிறது." என்ற தீர்மானம் திரு. ச. பீ. ஈ. மு. இபுராகிம் ராவுத்தர் அவர்களால் கொண்டுவரப்படும்.

சில அவசிய ஏற்பாடுகள்.

செக்காலை ரோட்டில் திரு. அருணசல ஆசாரியார் வீட்டுக்கு முன்னர் பொது ஜனங்கள் உபயோகத்திற்கு ஒரு கிணறு வெட்டத் தீர்மானித்தல்,

(உ) முனிசிபல் கல்லுக்கட்டி தண்ணீர் பிரளி செக்காலை ரோடு ஓரங்களிலும் கால்வாய் ஓரங்களிலும் ஏரானமான கத்தாழைகளிருப்பதால் அவற்றை அப்புறப்படுத்த ஏற்பாடு செய்தல்,

(௩) முரு. லெ. நா. வீட்டிற்கு முன் சிவன் கோவிலுக்குப் போகிற பாலம் சிறிதாயும் அசீர்ணப்பட்டுமிருப்பதால் அதனை இன்னும் உயரமாயும் அகலமாகவும் போட ஏற்பாடு செய்தல்.

இத்தீர்மானங்கள் திரு. சி. மு. அரு. முத்துராமன் செட்டியாரவர்களால் கொண்டுவரப்படும்.

தேவகோட்டை கார் ஸ்டாண்ட்.

தேவகோட்டைப் பக்கம் போகும் கார்கள் சம்பந்தமாக கார் ஸ்டாண்டை மாற்றியிருப்பதால் அவற்றின் சொந்தக்காரர்களுக்கு நஷ்டமும் அசௌகரியமும் ஏற்படுமென்று தெரிவிக்கலான மோட்டார் சொந்தக்காரர் மனு.

முனிசிபல் டோல்கேட் காண்டிரிபூஷன்.

முனிசிபாலிட்டியாரால் டோல்கேட் வருமானத்தில் ஒரு பகுதியை ராமனுதபுரம் ஜில்லா போர்டாருக்குக் கொடுக்கவேண்டுமென்றுள்ள விஷயத்தை ஜில்லா போர்டு பிரதிநிதிகளோடு கலந்து முடிவு செய்ய முனிசிபல் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தல்.

கப்பல்.

எதியோப்பியாக் கப்பல் தற்போது சென்னையிலிருக்கிறது. இம்மாதம் உ௮-ம் தேதி (உ௮-௩-௩௦) ரங்கூனுக்குப் பிரயாணமாகும்.

எரின்புராக் கப்பல் ௩க-ம் தேதி (௩க-௩-௩௦) திங்கட்கிழமை ரங்கூனிலிருந்து சென்னை வந்து சேரும். திரும்பவும், ௪-ம் தேதி (௪-௪-௩௦) வெள்ளிக்கிழமை ரங்கூனுக்குப் பிரயாணமாகும்.

எல்லங்காக் கப்பல் பினங்கிலிருந்தும் நாகப்பத்தினம் (உக-௩-௩௦) சென்னை வந்து சேரும். அம்மாதம் உ௮-ம் தேதி (உ௮-௩-௩௦) வெள்ளிக்கிழமை பினங்குக்குப் பிரயாணமாகும்.

—

எலக்டிரிக் லைசன்சு.

க௯உ௮-ம் வருட காரைக்குடி எலக்டிரிக் லைசன்சு திருத்தம் சம்பந்தமாக [illegible] பத்திரிகையில் வெளியான விளம்பரம்பற்றி [illegible] கோரி வாஸன [illegible] மெமோராண்டம்.

டோல்கேட்டை ஒழிக்க.

ஸ்தல ஸ்தாபனங்களில் மோட்டார் முதலிய வண்டிகள்மீது விதிக்கப்படும் வரியை ஒழித்து அதற்குப் பதிலாக ஒரு புரொவின்ஷியல் வரிவிதிக்க ஏற்பாடாகி வந்திருக்கும் டிராப்ட் மசோதாபற்றிய கௌன்சிலின் ஆலோசனை.

சுங்கக்கேட் குத்தகை.

க௯உ௯-௩௦-வருட குத்தகை விஷயமாக தனக்கு ஏற்படக்கூடிய நஷ்டக் குத்தகைத் தொகையிலிருந்து தள்ளிக்கொடுக்கும்படி கோரிவாலான திரு [illegible] செட்டியார் மனு.

சுங்கம் கோருப்பதினின்றும் விலக்க.

முனிசிபல் எல்லைக்குள், உத்தியோகவிஷயமாக வரும்போது சுங்கவரி வாங்குவதினின்றும் விலக்கவேண்டுமென்ற, ஜில்லா சுகாதார ஆபீசர், ஜில்லாபோர்டு [illegible] ஆகியோர் கடிதங்கள்.

முனிசிபல் சுகாதார உத்தியோகஸ்தர்.

௪-௪-௩௦-ம் தேதிமுதல் காரைக்குடி முனிசிப்பாலிட்டிக்கு ஓர் இரண்டாவது வகுப்பு சுகாதார உத்தியோகஸ்தர் நியமிக்கவேண்டுமென்ற ஹெல்த் டைரக்டர் கடிதம் பற்றிய ஆலோசனை.

பெண்கள் ஆசுபத்திரி.

க-உ-௩௦ கூடிய கூட்டத்தில், பெண்கள் குழந்தைகள் ஆசுபத்திரிக்கு ஓர் தக்க இடத்தை ஏற்பாடுசெய்ய ஸ்ரீமதி [illegible] அம்மாளுக்கு அதிகாரம் கொடுத்தும், இதுவரை ஷெயாரால் யாதொரு பதிலும் வராததால் தருத்த கட்டிடம் ஒன்றை பெண்கள் ஆசுபத்திரிக்காக வாடகைக்கு எடுக்கும் விஷயத்தை ஆலோசித்தல்.

சிவிக் சர்வே.

டவுன் பிளானில் திட்டப்படி சிவிக் சர்வே செய்வதற்கு ரூபா [illegible] ஆகுமென்ற டவுன் பிளானிங் டைரக்டர் கடிதம்பற்றிய ஆலோசனை.

—

ஊழியன்

மன்னவர் தமக்கும் அஞ்சேன்
மாண்பெரும் நாட்டிற் காக
என்னுயிர் தனையும் ஈவேன்
எதற்குமியான் யாண்டும் அஞ்சேன்
பன்னரும் பார தத்தாய்
பண்டைவாழ் வெய்தப் பாரில்
ஒன்னலர்க் கஞ்சா நல்ல
ஊழியம் தலைமேற் கொண்டேன்.

ஊழியன் காரைக்குடி
சுக்கில-ஹு பங்குனி-மீ கஉ-உ

வரைவின் மகளிர்.

மனிதனும் இயற்கைக்கு உட்பட்டவனே. எனினும், அதிலே தனது உறவும் ஸ்தானமும் யாதென அறியும் அறிவும் அவனுக்குண்டு. மனிதன் செயல்களில் எதையும் இயற்கையுடன் பொருந்த இயற்றுதல் வேண்டும். அவனது அநுபவங்களில் எதுவும் இயற்கையின் நோக்கம் பூர்த்தியாவதாகவே இருக்கவேண்டும். இயற்கையின் சட்டம், எங்கும் ஒன்றேயல்ல. அது வெவ்வேறு விதமாகத் திரிந்து நிற்கின்றது. விஷத்திற்கும் இயற்கையிலே இடமுண்டு. அது எதற்குப் பகையோ அந்த உயிர்வாழ்வுக்கும் இயற்கையிலே இடமுண்டு. உயிரைப் பெற்ற இயற்கை, நஞ்சையும் ஏன் பெற்றது என்ற கேள்வியை நாம் கேட்டுப் பயனில்லை. ஆனல், நஞ்சு உயிருக்குக் கூற்று என்பதை நாம் மறந்து வாழமுடியாது.

ஆணும் பெண்ணும் இணைவதிலே, இயற்கையின் நோக்கம் ஒன்று பூர்த்தியாகிறது. சிருஷ்டி சக்தி அவ்வாறு வெளிப்படுகின்றது. பண்டைக் கீழ்நாட்டு மக்கள் இதனை உணர்ந்திருந்தார்கள். இந்த மகத்தான உண்மை இப்பொழுது நீரித்துவிட்டது. காரணங்கள் பலவாயிருக்கலாம். ஒன்று மேனாட்டு நாகரிகம் என்பது தவருகாது. மண வாழ்வு, நன் மக்களைப் பெறுதற்கே யென்ற தத்துவம் நமது பழைய நல்ல நீதிகளிலெல்லாம் கூறப்படுகின்றது. ஆனல் இப்பொழுது இது முற்றிலும் மறந்துவிடப்பட்டதுடன், இந்த நோக்கம் நிரித்துப் பரிகசிக்கவும் படுகின்றது. இதனுல்தான், ஆண் பெண் உறவில், நாம் பற்பல தொல்லைகளை இந்நாள் அனுபவித்து வருகிறோம்.

இயற்கையின் தூண்டுதலான பற்பல இச்சைப் பூர்த்திகளிலே இன்பமுமுண்டு என்பதை நாம் மறுக்கவில்லை. உடலுக்கு உணவு வேண்டும். ஆனல் அதில் உருசியுமுண்டு. நாக்கு உருசியே பெரிதென நினைத்து மனிதன் உணவுகளை நிர்ணயித்துக்கொள்ளலாமா? அது முற்றிலும் தவருகும். நா வுருசியையே பெரிதென எண்ணி, அதைத் தன்னிச்சையாக விட்டுவிட்டால், மனிதன் தாங்கொணு நோய்கள் வாய்ப்பட்டு, இனித்த வாழ்வை யிழந்து போவான். இதுபோலத்தான், ஆண்பெண் தொடர்புவிஷயமுமாகும்.

ஆண் பெண் தொடர்பிலே ஓர் இன்பமுண்டானல், அதிலே இயற்கையின் தூய நோக்கமும் ஒன்றுண்டு. நோக்கம் பெரியது; இன்பம் சிறியது. இன்பத்தைமட்டில் நோக்கி, நமது வாழ்வை நாம் வகுத்துக்கொள்ளுவோமானல், அளவற்ற துன்பம் அதன் விளைவாய் எழுந்துவிடும். இதனை நாம் பலப்பல பொருள்களில் கண்கூடாகக் காண்கின்றோம்.

சமீபத்தில் அமெரிக்க நாட்டிலிருந்து கன்னி மேயோ என்னும் ஓர் மாது இங்குவந்து, சில குப்பைகளைத் திரட்டி, "இந்திய மாதா" என்ற ஓர் புத்தகம் எழுதியது நண்பர்கள் யாவருக்கும் தெரிந்திருக்கும். அவர் இந்தியச் சிறு பெண்கள் "பிள்ளை வர"லுக்குப் பெரும் சிரமப்படுவரெனத் தம் புத்தகத்தில் பரிகசித்துள்ளார். இந்தக் கூற்றைச் சிறிது மாற்றிவிட்டால், அது எவ்வளவு பெரு நோக்கம் கொண்டதா யிருக்கும் என்பதை நாம் காணவியலும். சிறு பெண்கள் இவ் ஆசைப்படுவார்களாயின் அது இன்னலுக்குட்படுத்தும் என்பதை எவரும் மறுக்க முடியாது. ஆனல், ஒரு பெண் மணவியாகும் விருப்பத்தின் பிரதம நோக்கம் தாய்மை பெறுவதாயிருக்குமானல், அது போற்றத் தகுந்ததேயாகும். கீழ் நாட்டில், மண வாழ்க்கையின் பிரதம நோக்கம் இதுவே. ஆனல், மேனுட்டிலோ இது உணர்ந்துகொள்ளப்படவில்லையென்று தோன்றுகிறது. அதனல்தான், செயற்கை முறைகளைக் கையாண்டு, பிரஜா உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் இயக்கங்கள் அங்கு வலுவடைந்து வருகின்றன. மனிதன் இயற்கையை ஏமாற்ற முடியுமா? இயற்கையின் நுட்பங்களில் ஈடுபட்டு, அவற்றைப் பிரகாசப்படுத்த மனிதனல் இயலும். ஆனல், அதனை மாற்றவோ ஏமாற்றவோ ஒரு காலும் இயலாது.

ஆண் பெண் சேர்க்கையின் முக்கிய நோக்கம் மறக்கப்படுவதன் காரியமாகத்தான் வரைவின் மகளிரும், வேறு பல தொல்லைகளும் தோன்றுகின்றனர். வரைவின் மகளிர் உலகெங்கும் இருக்கின்றார்கள். இந்தியாவில்தான் இவர்கள் உண்டு என்று எவரும் எண்ணிவிட வேண்டுவதில்லை. சமீபத்தில், 'இந்தியத்தாய்'க்குப் பதிலாக, "அமெரிக்க மாமா" என்ற ஒரு புத்தகம் வெளிவந்தது. அதில், அமெரிக்காவைப்பற்றிப் பலப்பல கேவலமான பொருள் பகரப்பட்டிருக்கின்றன. அதில் காணப்பட்ட விந்தைப் பொருள்களில் ஒன்று அமெரிக்காவில் வரைவின் மகளிரைப்போல, ஆண்களிலும் பணத்திற்கு உடலை அடகு தந்து வாழ்வோர் இருப்பதாகக் கூறப்பட்ட சங்கதியாகும். இந்த விஷயம் உண்மையாயிருக்குமோ என்று நாம் ஐயுறக் கூடும். ஆனல், ஐரோப்பிய நாகரிகம் பம்பாயிலும் இதை இறக்குமதி செய்திருப்பதாக ஊகிக்கத்தக்க செய்தியொன்றுஇப்பொழுது கிடைத்துளது.

பம்பாய்ச் சட்டசபையில், நிர்வாக உறுப்பினர் திரு. ஹாட்ஸன் வேசைத்தொழில் தடுக்கும் சட்டத்திற்குச் சமீபத்தில் ஓர் திருத்த மசோதாக் கொணர்ந்திருக்கிருர். "வேசை நிலயம்" (புரோதல்) என்பதன் விவரணத்தை மிக விளக்கமாகச் செய்வதே இதன் நோக்கமாம். "வேசை நிலயம்" நடத்துவோர் ஆணுயினும் பெண்ணுயினும் தண்டிக்கப் படத் தக்கவர் என்று விரிவாக விவரணம் இத்திருத்தத்தால் செய்யப்படுமாம். இம் மசோதா முதன்முறை வாசிக்கப்பட்டு நிறைவேறியதுடன், தனிக்கமிட்டியின் பரிசீலனைக்கு அனுப்பப்பெற்றுளது. தேவை மிக நெருக்கும்பொழுதுதான் விதிகளும் சட்டங்களும் தோன்றும். பம்பாயில், இத்தொல்லை மிக அதிகரித்துவிட்டது போல் காணப்படுகின்றது.

ஒவ்வொரு நகரத்திலுமே, வேசைகளின் தொல்லை மிகக் கடுமையாகிக் கொண்டு வருகின்றது என்று தோன்றுகின்றது. வரைவின் மகளிரிடம் பொது ஜனங்களுக்குச் சாதாரணமாக வெறுப்பிருந்தும், அவ்வாழ்வை அவர்கள் விடும் நிர்ப்பந்தம் எதுவும் உண்டாகவில்லை. மதுவிலக்குப் பிரசாரத்தைப்போல, வரைவின் மகளிர் விலக்குப் பிரசாரமும் மிகமிகத் தேவையென நாம் கருதுகிறோம். ஒவ்வொரு நகரமும் இக்கொடும் வழக்கத்தினின்றும் பரிசுத்தப்பட முயற்சி யெடுத்துக் கொள்ளவேண்டும். சட்டம் உதவுமென்பது உண்மைதான். ஆனல், அது மட்டிலுமல்ல; பொது ஜனங்களின் அபிப்பிராயம் வலுத்த வெளியீடு பெறவேண்டும். அதோடு, வீழ்ந்த மகளிரை உயர்த்தி, அவருக்குப் பல விதத்தில் உதவி புரியும் பொதுஜன இயக்கங்களும் தோன்ற வேண்டும். திக்கற்ற நிலைமையில் இருப்பவருக்கு உபதேசம் மட்டும் செய்வதால் பயனேற்படாது; ஒத்தாசையும் வேண்டும்.

இடி முழக்கம்.

அடக்குமுறை.

சென்ற பிப்ரவரி மாதம் ரங்கூனில் திரு. சென்குப்தா இரண்டு பிரசங்கங்கள் செய்தார். அதில் ராஜத்துரோகமாக ஏதோ கூறிவிட்டதாக, அவ்விடத்திய அரசாங்கத்தார் அவரைக் கைதி செய்தார்கள். பிராசிகியூஷன் தரப்பில் சில சாட்சிகள் விசாரிக்கப் பட்டார்கள். திரு. சென்குப்தா எதிர்வாதம் செய்யவில்லை. என்றாலும் மாஜிஸ்திரேட், சில பொது மனிதர்களை விசாரித்தார். சாட்சி கூறிய அவர்கள் பிரபலஸ்தர்கள். சென்குப்தாவின் பேச்சில் ராஜத்துரோகம் எதுவுமிருந்ததில்லை யென்று அவர்கள் சாட்சியம் விளக்கியது. அவரது பிரசங்கங்கள், அதற்கு மாருக, பலாத்காரத்தை அமைதியுறச்செய்வதாகவே யிருந்ததென்றும் சிலர் சாட்சியம் நல்கினர்கள். மாஜிஸ்திரேட் மறுபடியும்திரு. சென்குப்தாவை,எதிர்வாதம் செய்ய இஷ்டமுண்டா என்று கேட்டார். இல்லையென்ருர் சென்குப்தா. பத்துநாள் சாதாரணக் காவல் சென்குப்தாவுக்கு விதிக்கப்பட்டது. சென்குப்தா எதிர்வாதம்செய்யவில்லை, எனவே, பெயரளவில் ஓர் தண்டனை விதித்தாக வேண்டியதாயிற்று மாஜிஸ்திரேட்டுக்கு. இந்த நிகழ்ச்சி எதை விளக்குகின்றது? பர்மா அரசாங்கம் கலப்பற்ற அடக்குமுறையைக் கைக்கொள்ள உத்தேசம் கொண்டுள்ளது என்பதையே யல்லவா? அரசாங்கத்திற்கு அடக்குமுறை "வெறி" யுண்டாகிவிட்டால், நம்மில் எவ்வளவு பெரியவரும், எவ்வளவு களங்கமற்றவரும் இரையாகவேண்டியதுதான். பாதகமில்லை. அடிகளின் தலைமையில், இத்தத் தியாகத்திற்குத் தேசம் தயாராகிவிட்டது. கண்மூடித்தனமான அடக்குமுறை நாட்டின் 'சுதந்திர வேட்கையை எவ்வளவுகாலம் நெருக்கிவிட முடியும்?

சிறைத்திருத்தம்.

சிறைச்சாலை விதிகளில் பல திருத்தங்கள் தேவையெனப் பலத்த கிளர்ச்சி நடைபெற்றது. யதீந்திரதாஸரும், பொங்கி உத்தமரும் போன்ற பெரியோர்கள் தம் உயிரையும் அதற்குத் தியாகம் செய்தார்கள். இந்திய அரசாங்கம் என்ற இயந்திரம் சிறிது அசைந்தது. சிறைச்சாலை விதிகளில் திருத்தங்கள் சில சமீபத்தில் வெளியிடப்பட்டன. அவற்றைச் சென்னை மாகாண அரசாங்கம் வேண்டா வெறுப்புடன் அமுல்செய்ய முன்வந்திருக்கிறது. இந்திய அரசாங்கத்தின் முக்கியமான சிபார்சு ஒன்றைத் திருத்தி, சென்னை அரசாங்கம் வியாக்கியானம் செய்தது. இப்பொழுது சிறைக்குள் இருக்கும் "பி" வகுப்புக்கைதிகளைமறுபடி எந்தவகுப்புக்களில் சேர்ப்பதென்பதை முடிவு செய்யவேண்டியது மாகாண அரசாங்கத்தின் பொறுப்பாகும். இந்திய அரசாங்கத்தின் கருத்து, இப்பொழுது "பி" வகுப்பிலுள்ளவரில் எவரை "ஏ" வகுப்பிலும் சேர்க்கலாம் என்பதாகும். ஆனல், மாகாண அரசாங்கம் "பி" வகுப்பிலுள்ளவரில் எவரை "ஸி" வகுப்பிலும் தள்ளலாம் என்பதாகச் சிரத்தை கொண்டது. இதை "இந்து" பத்திரிகை ஓர் தலையங்கத்தில் கண்டித்ததன்மேல், இப்பொழுது புனராலோசனை நடக்கிறதாம். ஏன் இவ்வாறு, மத்திய அரசாங்கத்தின் சிறிது தயாளத்தையும், மாகாண அரசாங்கம் வேண்டா வெறுப்புடன் அமுல் செய்யவேண்டும்? அதிகார வருக்கத்தின் மனோ பாவம் இத்தகையது.

காந்திவிஜய முதல் வெற்றிகள்.

மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரக விஜயம் துவக்கத்திலேயே மிகுந்த வெற்றி பெற்றுவருவது களிப்பிற் குரியதாகும். காந்தியின் உப்புவரி மறுப்பு இயக்கம், ஓர் விளையாட்டுச் சங்கதியெனச் சில பிரமுகர்கள் நினைத்திருந்தார்கள். அரசாங்கம் அதை இப்பொழுது அப்படி நினைக்கவில்லை.உப்புவரி உத்தியோகஸ்தருக்குள்ள அதிகாரத்தை, ஜவானுக்கு மேற்பட்ட எல்லாப் போலீஸ் உத்தியோகஸ்தர்கட்கும் அரசாங்கம் அளித்துவிட்டது எதைக் காட்டுகிறது? காந்தி செல்லும் மார்க்கத்திலேயுள்ள கிராம உத்தியோகஸ்தர்கள் பெரும்பாலார் ராஜினமாச் செய்துவிட்டார்கள். அதுகண்டு லண்டன் பத்திரிகைகள் அடைந்துள்ள பீதி ஆத்திரம்கொண்ட கூற்றுக்களாக வெளிவருகின்றன. 'அப்ஸர்வர்' பத்திரிகையின் நிருபர் ஸ்தலத்திலிருந்து அதற்கு அனுப்பியுள்ள செய்தியில், "கிராம உத்தியோகஸ்தர்கள் ராஜினமாச் செய்துவருவது கண்டு பம்பாய் அரசாங்கத்தார் பெரிதும் கலக்கமடைந்துவிட்டார்கள்; இதனுல் அவரைக் கைதி செய்துவிடலாமா வென்று அவர்கள் யோசனை செய்து கொண்டிருக்கின்ருர்கள்" என்கிருர். கிராமதிகாரிகள் ராஜீநாமா நின்றுவிட்டால், காந்தியைக் கைதி செய்யாது விட்டுவிட உத்தேசமாம். படேல் சிறை சென்றது; சம்பந்தப்படாத அற்ப உத்தியோகஸ்தர்களுக்கும் அதிகாரம் கிடைத்தது; ஏராளமான கிராம உத்தியோகஸ்தர்களின் ராஜீநாமா; அரசாங்கத்தின் அமைதி குலைந்தது— இவையெல்லாம் பிரதம வெற்றிகளல்லவா?

காந்தி விஜயம்.

ஜலால்பூரில் உப்பு உற்பத்தி செய்வதென்று மார்ச்சு கஉ-உ சபர்மதியை விட்டுப் புறப்பட்ட மகாத்மாகாந்தி, தமது கோஷ்டியுடன், அஸ்லாலி, பாரிஜா, நவகர்ம்,நாய்கா, உாஸ்னு, தாபான், நாடியாது, போரியாலி, ஆநந்து, நாப்பா, போர்ஸத், ராஸ், கனகாபுரா, காரேலி முதலிய விடங்களுக்குக் கால்நடையாக விஜயம்செய்து, ஆங்காங்கு பிரசங்கங்களும் நிகழ்த்திக்கொண்டு, மார்ச்சு மாதம் உக-உ காஜோர போய்ச் சேர்ந்தார். சனிக்கிழமைப் பத்திரிகைச்செய்திகளினின்றும்அதன்பிறகுமகாத்மாவின் புரோச்ஜில்லா பிரயாணத்திட்டம் பின்வருமாறெனத் தெரிகிறது:—ஞாயிறன்று புவாவும் ஸெமானியும்; திங்கள், ஸெமானியில் மௌனம்; செவ்வாய் டிரால்ஸாவும் டிரோலும்; புதன், புரோச்சும் அங்கிலேஸ்வரும்; வியாழன், ஸஜோதும் மங்ரோலும்; வெள்ளி, ராயமா.

* * *

தமிழ்நாட்டு சத்தியாக்கிரக இடம்.

ஏப்பிரல்மாதம் பதினைந்தாம் தேதி வாக்கில் தமிழ்நாட்டில் சத்தியாக்கிரகம் துவங்க, திரு. வி. ராஜகோபாலாச்சாரியார் உத்தேசித்திருப்பதாய்த் தெரிகிறது. "இந்து" நிருபர் அவரைப்பேட்டிகண்டு, எங்கு துவங்கப்படலாம் என்று கேட்டதற்கு, கன்னியாகுமரி முனையை இடங்களுள் ஒன்ருகக் குறிப்பிட்டாராம். திரு. வி. ராஜகோபாலாச் சாரியாரும் வேறு சிலரும் வேதாரண்ணியம் கடற்கரையைப் போய்ப் பார்வையிட்டு வந்ததாகவும் தெரிகிறது.

* * *

சர்க்கா சங்க முன்னேற்பாடு.

அகில இந்தியச் சர்க்கா சங்கம் சமீபத்தில் ஓர் கூட்டம்கூடி, அதன் அங்கத்தினரில் எவராவது கைதி செய்யப்பட்டால், உத்தியோகஸ்தர்கள் அவர்களுக்குப் பதில் உறுப்பினரை நியமித்துக்கொள்ள அதிகாரம் கொடுப்பதாகவும், தொண்டர்களாக்ச் சேர்வதற்கு சர்க்காசங்க ஊழியர்களுக்கு அனுமதி கொடுப்பதாகவும், தீர்மானங்கள் செய்துள்ளது.

* * *

கிராம உத்தியோகஸ்தர் ராஜினமா.

ஜம்புஸார் தாலுக்காவில் எல்லாப்போலீஸ் படேல்களும் ராஜினமாச் செய்துவிட்டார்கள். அமாது தாலுக்காவிலும் எல்லா படேல்களும் தங்கள் ராஜினமாக்களைத் தயாராய் எழுதிவைத்துக்கொண்டிருக்கிருர்கள்.

* * *

அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி.

அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி, மார்ச்சு-மீ உக-உ அகமாதாபாதில் மிக உற்சாகமான காட்சிகளுடன் கூடியது. அதன் நிகழ்ச்சிகள் மிக அமைதியாகவும், மிக்ச் சுருக்காகவும் நடந்தன. "போர் நடந்துகொண்டிருக்கும்பொழுது, யார் வாதம் செய்து கொண்டிருக்கத் துணிவர்?"—இந்த உணர்ச்சி உறுப்பினர் மனத்தைப்பற்றிக் கொண்டிருந்ததாம். மகாத்மா காந்திக்கு சத்தியாக்கிரகம் செய்யக் காரியக்கமிட்டி அளித்த அதிகாரத்தை ஆமோதிப்பதாகவும், அவர் கஉ-உ அதற்காகத் துவங்கிய பிரயாணத்திற்கு அவரையும் அவர் தோழரையும் வாழ்த்துவதாகவும், நாடு அதற்கு ஆதரவு நல்குமென நம்புவதாகவும் ஓர் தீர்மானம் நிறைவேறியது. மாகாணக் கமிட்டிகள் சத்தியாக்கிரக ஏற்பாடுகள் துவங்கவும் அதிகாரமளிக்கப்பட்டது. ஸர்தார் வல்லபாய் சிறை சென்றதற்கு வாழ்த்தப்பட்டது. சர்க்கார் கைதி செய்தால் தலைவர்

சத்தியாக்கிரகச் செய்திகள்.

தமக்குப் பின் தமது ஸ்தானத்திற்கு வர வேண்டியவரைத் தாமே நியமிக்கவும்,பொக்கிஷதாரும் அவ்வாறே தமக்குப் பின்னவரை நியமிக்கவும், வேறு காலியாகக் கூடிய உறுப்பினர் பதவிகளைத் தற்காலிமாகத் தலைவர் நிறைக்கவும் அதிகாரம் அளித்து; ஓர் தீர்மானம் நிறைவேறியது.

* * *

தமிழ்நாட்டுத் தொண்டர் பிரதிஞ்ஞை.

தமிழ் நாட்டுத் தொண்டர் கையெழுத்திடவேண்டிய பிரதிஞ்ஞைப் பத்திரம் ஒன்று பின்வருமாறு திரு. ராஜகோபாலாச்சாரியாரால் தயாரிக்கப்பட்டிருக்கிறது:— "காங்கிரஸின் பூர்ண சுயராஜ்யக் கொள்கையை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். இந்தியா சுயராஜ்யமடைவதற்கு, அஹிம்சையை ஓர் விதியாக நான் நம்புகிறேன். மகாத்மாவால் துவங்கப்பட்டுள்ள சட்டமறுப்புப் போராட்டத்தில் சேர்ந்துகொள்ள நான் விரும்புகிறேன். போராட்டத்தில் தலைமை வகிக்கும் தலைவர்கள் இடும் கட்டளைகட்கிணங்க நான் எப்பொழுதும் நடப்பதாக வாக்களிக்கிறேன். இந்த இயக்கத்தின் பலனுக, சிறை வாசம் உள்பட எனக்கு விதிக்கப்படக்கூடிய எல்லாத் தண்டனைகளையும் நான் மன விருப்புடனும், பொறுமையாகவும் அனுபவிப்பேன். இந்தப் போராட்டம் நடக்கும்பொழுது, எனக்கோ எனது குடும்பத்திற்கோ பண உதவி எதுவும் நான் கோரமாட்டேன். மகாத்மாவின் கட்டளைகளின்படியும், விருப்பங்களின்படியும் பொதுவாக எல்லா விஷயங்களிலுமே நடந்துகொள்ள முயலுவேன். இறைவன் எனக்கு உதவி புரிவாராக!" இந்தப் பிரதிஞ்ஞைச் சீட்டில், "ஆழ்ந்த யோசனை செய்துவிட்டுப் பிறகு கையெழுத்திடுங்கள்" என்ற எச்சரிக்கையும் விடுக்கப் பெற்றிருக்கிறது.

* * *

ஆந்திரம் தயார்.

ஆந்திர நாட்டில் சத்தியாக்கிரகம் துவங்க, தேசபக்த கொண்டா வெங்கடப்பையாவுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. மகாத்மா காந்தி கைதியானவுடனேயோ, தேவையாயின் அதற்கு முன்னேயோ சத்தியாக்கிரகம் துவங்க ஆந்திரம் தயாராயிருப்பதாக அவர் கூறியுள்ளார். கடலோர ஜில்லாக்கள் தயாராகிக்கொண்டு வருகின்றன.

* * *

பம்பாயில் ஏற்பாடு.

இந்துஸ்தானி ஸேவா தளத்தைச்சேர்ந்த எடு தொண்டர்கள், வால்டா உப்பளத்தைப் போய்ப் பார்வையிடச் சென்ருர்கள். அவர்கள் சென்றதும், அதிகாரிகள் திடுக்கிட்டுக் கதவுகளைச் சாத்திவிட்டார்கள். அதோடு, பாணுத்தடிகளையும், ரிவால்வர்களையும் தாங்கிய பெருத்த போலீஸ் படையொன்றையும் தயாராக அவர்கள் ஒளித்து வைத்திருந்தார்களாம். ஆனல், தொண்டர்கள், இன்னும் தாங்கள் சத்தியாக்கிரகம் துவங்கவில்லையென்று அதிகாரிகளுக்கு அமைதியாகத் தெரிவித்துத் திரும்பினர்களாம்.

* * *

ஸினிமாப் படங்களுக்குத் தடை.

சாரதா பிலிம் கம்பெனியாரால் தயாரிக்கப்பட்ட "மகாத்மா காந்தியின் சுதந்திர விஜயம்", ஸ்ரீ கிருஷ்ண பிலிம் கம்பெனியின் "ககூ௩௰-ம் ஆண்டு மார்ச்சுமீ கஉவ மகாத்மா காந்தி துவங்கிய சரித்திர நிகழ்ச்சியான விஜயம்" ஸ்ரீரஞ்சித் பிலிம் கம்பெனியாரின் "மகாத்மா காந்தி விஜயம், மார்ச்சு மாதம் கஉவ, அஹமதாபாது" என்ற மூன்று சினிமாப் படங்களும், பம்பாய், ஐக்கிய மாகாணம், பஞ்சாப் ஆகியவற்றின் அரசாங்கத்தாரால் தடுக்கப்பெற்றுவிட்டன.

* * *

ஓர் முதியவள் வாழ்த்து.

மார்ச்சுமீ ககஉ காந்தியடிகள் கனகாபுரத்திலிருக்கையில், கoடு வயது சென்றவளான ஓர் முதிய பெண்மணி காந்தியடிகளைத் தரிசிக்கச் சென்ருள். அவள் காந்தியை வணங்கி, அவர் சுயராஜ்ய வெற்றி பெற்றுத் திரும்புவதற்காகவென அவர் நெற்றியில் ஓர் குங்குமப் பொட்டிட்டாள். வெற்றிபெற்ருலன்றித் திரும்பேன் எனக் கூறிய மகாத்மா, தம்மை ஆசீர்வதிக்குமாறு அம் முதியோளை வேண்டிக்கொண்டார். இவ்வளவு பெரும் மகானை ஆசீர்வதிக்கத் தான் உரியவள் அல்லவென அவள் மறுமொழியுரைத்தாள். 'என்ருலும், நீங்கள் நிச்சயம் சுயராஜ்ய வெற்றி பெறுவீர்கள்' என்று புகன்ருள்.

* * *

டில்லியில் போர்க் கழகம்.

அகில இந்தியக் காங்கிரசின் அனுமதி பெற்று சத்தியாக்கிரகம் துவங்குவதென மூன்று பெயரடங்கிய ஓர் போர்க்கழகத்தை டில்லிக் காங்கிரஸ் கமிட்டி அமைத்துளது. ருஅ தொண்டர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

* * *

வங்காளத் தொண்டர்கள்.

ே சத்தியாக்கிரகத் தொண்டர்கள் தயாராகக் கல்கத்தா போய்ச்சேர்ந்து, அங்கிருந்து பங்குராவுக்குப் பிரயாணமானுர்கள். வங்காளச் சட்டமறுப்புக் கழகத்தின் கட்டளைக்கு அவர்கள் காத்திருக்கிருர்கள். வங்காளத்திற்கு திரு. சதீஷ்சந்திரதாஸ் குப்தா சர்வாதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

* * *

மகாராஷ்டிரத்தின் முயற்சி.

பூனவில் எடு தலைவர்கள் கூடி, புதிய காங்கிரஸ்கட்சி யொன்றை ஸ்தாபித்துள்ளார்கள். ஸத்தியாக்கிரகக் கழகம் ஒன்று அமைக்கப்பட்டது. உப்புவரி மறுப்புத் துவங்கத் தீர்மானிக்கப்பட்டது.

* * *

கிராம உத்தியோகஸ்தர் கடிதம்.

நவசாரியில் காற்பது கிராமப் படேல்கள் ராஜினமாச் செய்துவிட்டார்கள். இன்னும் அநேகர் செய்யக்கூடும் என்றும் தெரிகிறது. தன்மதிப்புள்ள எவனும் இந்த அரசாங்கத்துடன் ஒத்துழைக்க முடியாதென்று அந்த ராஜினமாக் கடிதங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

* * *

சுயராஜ்ய தூதர்கள்.

பீஹார் வித்தியாபீட அதிகாரிகள் மாணவர்களைச் சிறு சிறு கூட்டமாகச் சேர்த்து, கிராமத்திற்குக் கிராமம் சென்று சுயராஜ்யச் செய்தியைப் பரப்ப அனுப்பத் தீர்மானித்துள்ளார்கள். முதல் கூட்டம் உடு-ந் தேதி புறப்படும்.

* * *

காந்தியை விடவா?

ஸர்தார் வல்லபாய் தண்டனையைப்பற்றி, பம்பாய்ச் சட்டசபையில் கேள்விகளுக்குச் சர்க்கார் பதிலளிக்கையில், சர்தார் மீது விதிக்கப்பட்ட தடை யுத்தரவு வேறு யாருக்காவது விதிக்கப்பட்டதுண்டா என்று திரு. சுவாமி நாராயணன் வினவினர்.

சர்க்கார் பதில்:—இல்லை. அது அவசியமென்று மாஜிஸ்திரேட் கருதவில்லை.

கேள்வி:—காந்தியைவிட திரு. வல்லபாய் அதிக அபாயமானவர் என்று அரசாங்கத்தார் நினைக்கிருர்களா?

பதில் கிடையாது.

* * *

காந்தி தடுக்கப்படுவாரா?

காந்தியைக் கடற்கரைக்குப் போகவொட்டாமல், பட்டாணியத் துருப்புகளை வரிசையாக, நிறுத்தித் தடுத்துவிட அரசாங்கத்துக்கு உத்தேசமிருப்பதாக ஓர் செய்தி கூறியது. பின்னல், அவ்வாறு உத்தேசமில்லை யென்று வேருேர் செய்தி சொல்லுகிறது.

* * *

உ௦௦௦ தொண்டர்கள்.

கெய்ராவிலிருந்து உ௦௦௦ தொண்டர்கள் சத்தியாக்கிரகத்துக்குச் சேர்வரென எதிர்பார்க்கப்படுகிறது.

* * *

பணங் கூடாது.

தொண்டர்கள் பணம் வைத்துக்கொள்ளக்கூடாதென்று மகாத்மா கட்டளையிட்டுள்ளார்.

* * *

அற்ப உத்தியோகஸ்தருக்கும் அதிகாரம்.

காந்தியடிகளின் உப்புவரி மறுப்புச் சத்தியாக்கிரகத்தை எதிர்ப்பதற்காக, இந்திய சர்க்கார் ஓர் புதிய விளம்பரம் செய்திருக்கிருர்கள். பம்பாய் மாகாணத்தில், இனிமேல், சாதாரணச் சேவகருக்கு மேற்பட்ட எந்தப் போலீஸ் அதிகாரிக்கும், உப்புவரி உத்தியோகஸ்தரின் சகல அதிகாரங்களும் உண்டென்பது அதன் அறிவிப்பு.

* * *

சபர்மதியில் இடமில்லை.

சத்தியாக்கிரகத்தில் சேர்வதற்காக அநேகர் சபர்மதிக்கு வருவதாகத் [illegible] அநேகர் அங்கு [illegible] புறப்பட்டுவிட்டார்களாம். சபர்மதியில் எல்லாருக்கும் பயிற்சியளிக்க முடியாதென்றும் அவ்வம்மாகாணத்திலேயே அவரவர் சத்தியாக்கிரகம் செய்யவேண்டுமென்றும் [illegible] தேவதேசாய் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

* * *

அரசாங்கக் கட்டிடத்தில் தேசியக் கொடி.

போர்ஸத்தில் சர்க்கார் [illegible] மகாத்மா தங்க வசதி செய்யப்பட்டிருந்தது. "இந்து"வின் நிருபர் "இது அரசாங்கக் கஸாசாவல்லவா?" என்று வினவினர். "ஆமாம்" என்ற பதில் கிடைத்தது.

நிருபர்:—அரசாங்கக் கட்டிடத்தில் காந்தி தங்குவதற்கு, சர்க்கார் அனுமதிக்கிருர்களா? தேசியக் கொடியொன்றுகூட இதன் மீது பறக்கிறதே!

பதில்:—இது போர்ஸத், ஐயா! இங்கே ஒருவகையான சுயராஜ்யம் எங்களுக்குண்டு. உண்மையைக் கூறினுல், அநேக ஐரோப்பியர் கட்டிடங்கள்மீது நானே தேசியக் கொடியை ஏற்றியிருக்கிறேன்.

நிருபர்:—இது ஒருவேளை ஒரு முனிசிபல் அல்லது லோகல் போர்டு கஸாசாவாயிருக்குமோ?

பதில்:—இல்லவேயில்லை. இது ஒரு பக்கா சர்க்கார்க் கஸாசாவே. இவ்விடத்திய சங்கதிகள் மற்ற விடங்களிலும் மாறுபட்டிருக்கும். வல்லபாய் உத்தரவில்லாமலும், சர்க்கார் உத்தியோகஸ்தர் எவரும் கடையில் ஒரு செருப்புப் பெட்டிகூட வாங்க முடியாது. சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் தங்கள் அதிகாரத்தைவிட எங்கள் நம்பிக்கையிலேயே இங்கே வசிக்கிருர்கள்.

முனிசிபல் கௌன்ஸில்.

காரைக்குடி முனிசிப்பாலிட்டிக்கு வந்திருக்கும் டெண்டர்களைப் பரிசோதனை செய்தற்கும், ககஙo-கக-ம் வருட டோல்கேட் குத்தகைக்குவிடும் பொருட்டும், சென்ற செவ்வாய்க்கிழமை மாலை ௫-மணிக்கு முனிசிபல் காரியாலயத்தில் சேர்மன் ராவ்பகதூர் ஆவி. பழ. சிதம்பரம் செட்டியாரவர்களும் ஒன்பது அங்கத்தினர்களும் வந்திருந்தனர்.

முனிசிபல் சம்பந்தமான அச்சுவேலைகட்கு குமரன், பாஸ்கரன் ஆகிய இரு அச்சுக்கூடத்திலிருந்தும் டெண்டர்கள் வந்திருந்தன. அவற்றுள், பாஸ்கரன் பிரஸிலிருந்து வந்த டெண்டரில் அச்சுக்கூலி விகிதங்கள் பெரும்பாலும் குறைவாகவிருந்தன. எனினும், அங்கத்தவர்களிடையே அபிப்பிராயபேத மிருந்ததால், அது விஷயம் ஓட்டுக்கு விடப்பட்டது. அப்போது திருவாளர்களான மு. ராம. பெரியணன் செட்டியார், ச. பீ. கு. மு. இபுராகிம் ராவுத்தார், குருசாமி ஆகிய மூவரும் குமரன் பிரசுக்கு சாதகமாகவும் திரு. என். எஸ். வெங்கடராமையர், ராவ்பகதூர் க. அ. கு. ராமநாதன் செட்டியார் திரு. சித. கா. ராம. நாராயணன்செட்டியார் அ. ராம. கா. சித. நாராயணன் செட்டியார், சேர்மன் ஆகியோர் பாஸ்கரன் பிரசுக்குச் சாதகமாகவும் வாக்களித்தார்கள். திரு. சி. மு. அரு. முத்துராமன் செட்டியார் திரு. முத்து கு. பழ. முருகப்ப செட்டியார் ஆகிய இருவரும் நடுநிலைமை வகித்தார்கள். எனவே, பாஸ்கரன் பிரசுக்கு கொடுப்பதென முடிவுசெய்யப் பட்டது. டோல்கேட் குத்தகை ஏலம் சரியான தொகைக்கு கேட்கப்படாததால் மார்ச்சு உஎ-ம் தேதி மாற்றிவைக்கப்பட்டது.—[illegible]

காலண்டர் வரவு.

ஏ. வி. அன்சன்ஸ், காரைக்குடி:—இவர்களிடமிருந்து ஒரு குட்ஈயர் காலெண்டரும், கும்பகோணம் அப்துல் ரஹமான் காலண்டர் ஒன்றும் வரப்பெற்றோம். குட்ஈயர் காலெண்டர் பெரிய மூன்று வர்ணப் படமொன்றில் இணைக்கப்பட்டிருக்கின்றது. மிகக் கெட்டியான காங்கர் பேப்பர் மாதம் ஒன்றுக்கு ஒரு தாள் அடங்கியது. ஒவ்வொரு மாதத் தாளிலும் சற்றுச் சிறிய எழுத்தில் மூந்திய மாத வரும் மாதத் தேதி கிழமைகளும் அச்சடிக்கப்பட்டிருக்கின்றன. ரஹமான் காலண்டர் மிக நேர்த்தியான வர்ணச் சித்திரத் தாளில் இணைக்கப்பட்டிருக்கின்றது. ஓர் அழகிய மாது, ஈசன் விக்கிரகமொன்றின் முன் நிவேதனம் செய்கின்றாள். அவள் நிற்கும் நிலைமையும் கெஞ்சும் பார்வையும் ஒளி பொருந்திய வதனமும் மனங்கவர் தன்மையின.

கோலாலம்பூர்.

(பங்குனி உத்திர மகோற்சவம்.)

சுக்ல பங்குனி உஅ-ம் தேதி குருவாரம் காலை எ௯-மணிக்கு தண்டபாணி மூர்த்தியவர்கள் சர்வாபரணலங்கிருதராய் பலவித வாத்தியம்சர்க்கரைக காவடி முதலிய விநோதங்களுடன் அம்பாங்தெருவிலிருந்து,பத்து ரோட்டு அலங்கார சம்பிரம அழகிய மாமணி மண்டபத்தில் எழுந்தருளி, உக-ம் தேதி சுக்கிரவாரத்தன்று மயில்வாகன காட்சியளிப்பார். கூ0-ம் தேதி சனிக்கிழமை வெள்ளி ரதத்தில் பலவித வாத்தியகோஷங்களோடு திருவுலாக்கொண்டு தமது இருக்கைக்கு எழுந்தருளுவார் என்று கோலாலம்பூர் நாட்டுக்கோட்டை நகரத்தார் அறிவிக்கிறார்கள்.

செய்திகள்.

புதியஹைக்கோட் நீதிபதி

ரஜாவில் போகும் நீதிபதி குமாரசாமி சாஸ்திரியார் ஸ்தானத்தில் திவான்பகதூர் கே. சுந்தரம் செட்டியார், ஆக்டிங் ஜட்ஜியாக நியமிக்கப் பட்டுள்ளார்.

* * *

சேன்குப்தாவிற்குத் தண்டனை.

கல்கத்தா மேயரான திரு. சென்குப்தா அவர்கள் ராஜத்துவேஷ விஷயமாகப் பேசியதாகக் கொண்டுவரப் பட்டவழக்கில் ஒவ்வொரு குற்றத்திற்கும் பத்துநாள் வீதம் வெறுங்காவல் தண்டனைஏககாலத்தில் அனுபவிக்கும்படி தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.

* * *

தர்மபூஷணத்திற்கு விசேஷ உரிமை.

ராமச்சந்திரபுரம் திவான்பகதூர் தர்மபூஷணம் தீ. நா. முத்தையா செட்டியார் அவர்களை அன்னார் கொடுக்கவேண்டிய கடத்திற்காக வாரண்டில் பிடிக்கவோ, சிவில் ஜயிலில் வைக்கவோ கூடாதென புதுக்கோட்டை அரசாங்கத்தார், ககஙஈ-ம் வருஷம் உ-வது ரெகுலேஷன் ங-வது செக்ஷன்படி உத்தரவு பிறப்பித்துள்ளார் எனத் தெரிகிறது.

* * *

இலங்கை இந்தியர் உரிமை.

இலங்கை பெரிய கங்காணிகள் சங்கத்தார் அங்குள்ள சுமார் எழு லட்சம் இந்தியத் தொழிலாளர் சார்பாக, குடியேற்ற நாட்டு மந்திரிக்கு ஓர் தந்தியனுப்பியுள்ளார். அதில் இந்தியர் ஓட்டுரிமை விஷயமாக டொனமூர் கமிஷன் சிபார்சை மீறிய எந்த நிபந்தனை அல்லது கட்டாயமும் ஏற்படுத்தக் கூடாதென்றும் ஒரே ஆட்சியில் உட்பட்டுள்ள மக்கள் விஷயத்தில் நடுநிலைமையற்று ஒரு சார்பாக விருத்தல் வெறுக்கத்தக்கதென்றும், கவர்னர் யோசனைகளை ஒப்புக்கொள்ளக் கூடாதென்றும், அவமானத்தை கொடுக்கும் எந்த நிபந்தனைக்கும் உட்பட முடியாதென்றும் கூறியுள்ளார்.

இந்தியச் சட்டசபை உபதேர்தல்.

இந்திய சட்டசபையின் மதுரை-ராமனாதபுரம்—திருநெல்வேலி முகமதியரல்லாதார் தொகுதியின் உபதேர்தலுக்கு மதுரை வக்கீல் திரு. என். நடேசையர் அவர்களும் திரு. ஸ்ரீமான் காந்திமதிநாத பிள்ளை அவர்களும் அபேட்சகாக நின்றார்கள். அவருள் திரு. நடேசையருக்குக் கூடுதல் ஓட்டுகள் கிடைத்ததால் அவர் இந்திய சட்டசபை அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

* * *

அமராவதிபுதூர்.

காந்தி பெண்பாடசாலை மணிமேகலா சங்கம் இம்மதி கூஉ-தேதி யன்று ஞாயிற்றுக்கிழமையில் கூடிற்று. அப்பொழுது வி. பரமசிவன் அவர்கள் தலைமை வகித்தார்கள். தலைவர் முகவுரையின் பின்னர் மாணவிகள் எல்லோரும் சுயராஜயம் என்பதுபற்றிப் பொதுவாகப் பேசியதின் சாரம் வருமாறு.—

சுயராஜ்யம் என்பது நாமே நம்முடைய நாட்டை (ஆள்வது இப்பொழுது நம்முடைய நாடாகிய இந்தியாவை ஆளும் பாக்கியம்நம்மக்களுக்குக்கிடைக்கவில்லை. யாருக்குக்கிடைத்திருக்கிறது என்றால் இங்கிலீஷ்காரனுக்கே நம்முடைய நாட்டை ஆளும் பாக்கியம் கிடைத்திருக்கிறது. நம்முடைய சொந்த நாடாகிய இந்தியா தேசம் நமக்கே கிடைக்கவேண்டும் என்பதற்காக எத்தனையோபேர் ஜெயிலுக்குப் போயிருக்கிறார்கள். இன்னும் எத்தனையோபேர்கள். ஜெயிலுக்குப் போகதயாராக இருக்கிறார்கள்.'' என்று சொல்லி முடித்தார்கள். பிறகு தலைவர் முடிவுரை நடந்ததும் சங்கத்தலைரால் அனைவருக்கும் நன்றி கூறப்பட்டது. அடுத்த வாரத்திற்குப் பெண்களும் சீர்திருத்தமும் என்பதுபற்றிப் பேசப்படும் என்று சொல்லிக் கூட்டம் இனிது நிறைவேறியது என்று காரியதரிசி அறிவிக்கிறார்.

உள்ளூர்.

திருச்சி மானமதுரை ரெயில்பாதை திறப்பு:— திருச்சி மானமதுரைப் பாதையின் புதுக்கோட்டை காரைக்குடி பகுதியில் க-ச-கூ0 தேதிமுதல் சாமான்கள் போக்குவரவுக்காக, 'குட்ஸ்' வண்டிகள் விடப்படும் எனத் தெரிகிறது. ஆனால், தற்போது அழிந்துபோகக்கூடிய சாமான்கள், ஆடுமாடுகள் முதலிய உயிரினங்கள், முதலியன ரயில்மூலம் அனுப்புதற்கு டிக்கட் கொடுக்கப்பட மாட்டது. இப்பகுதியில் உள்ள ஸ்டேஷன்கள் வருமாறு.—

(க) நமன சமுத்திரம் (உ) திருமயம் (ங) செட்டிநாடு (ச) கோட்டையூர் (ரு) காரைக்குடி,

பிரயாணிகள் யாத்திரை செய்யும் வண்டிகள் மேமாதம் கடைசிவாரமுதல் விடப்படும். திருப்புவிழா எப்பொழுது நடத்துவது என்றவிஷயம் இன்னும் முடிவுசெய்யப் படவில்லையாம்.

ஓர் புதிய சினிமாக் கம்பெனி:— இவ்வூரில் ஓர் புதிய சினிமாக் கம்பெனி கூடியசீக்கிரம் வரும்எனத் தெரிகிறது. இவர்கள் கல்லுக்கட்டியில் ஓர் தகுதிவாய்ந்த இடத்தில் புதிய முறையில் கொட்டகை அமைக்க உத்தேசித்திருக்கிறார்கள் இதில் பல உயரிய படங்கள் காட்டப்படும் எனவும் தெரிகிறது என்று ஒருஅன்பர் அறிவிக்கிறார்

[புரொபஸர் ஈன்ஸ்டீன் உலகப் பிரசித்தியடைந்த ஓர் ஜர்மன் மேதாவி. நிபுணர் நியூடனின் "ஆகர்ஷண சக்தி" (கிராவிடி) என்ற தத்துவத்தை அசைத்து "பரஸ்பரக் கவர்ச்சி" (ரெலடிவிடி) என்ற புதியதொரு தத்துவத்தைக் கூறி, உலகிலுள்ள வானசாஸ்திர நிபுணர்களையெல்லாம் புரொபஸர் ஈன்ஸ்டீன் வியப்புறச் செய்தவர். இன்னும் அவர் போராய்ச்சிகள் பல வானக்கலைத்துறையில் செய்துவருகின்றார். இவருடன் தாம் பேட்டிகண்ட விவரத்தை டாக்டர் எல். அய்க்னெர் என்பவர் "இந்து" பத்திரிகையில் எழுதியிருக்கின்றார். அதனை மொழிபெயர்த்துக் கீழே தந்திருக்கிறோம்.]

கலைஞர் கலைக் காதல்.

(நிபுணர் ஈன்ஸ்டீனின் அபிப்பிராயம்,)

சர்வதேச மகாநாட்டினால் நியமிக்கப்பட்ட அறிஞர் ஐக்கியக் கமிட்டி (இன்டெலெக்சுவல் கோவாபரேஷன் கமிட்டி) தன் அலுவல்களை பாரிஸில் துவங்கியபொழுது,அதன் முதல் கூட்டத்திற்கு, அந்நிய நாடுகளிலிருந்து பிரபல மனிதர்கள் பலர் விஜயம் செய்தார்கள். அவர்களுள் ஒருவர் கூச்சமுடையவராகவும், எல்லாருடனும் தாராளமாகப் பழகாதவராகவும் காணப்பட்டார். அவரது வதனத்தில், ஓர் குழந்தையின் முகத்திலென, ஒளியும் மாசின்மையும் இலங்கின. இவர்தான் உலகப் பிரசித்திபெற்ற புரொபஸர் ஈன்ஸ்டீன்; 'பரஸ்பரக் கவர்ச்சி' (ரெலடிவிடி) என்ற சித்தாந்தத்தைக் கண்டு பிடித்தவர். ஒவ்வொருவரும் அவரைக்காண வேட்கையுற்றிருந்தார்கள்; சாதாரண மனிதர் விளங்கிக்கொள்ளப் பெருங் கஷ்டமாயிருக்கும் அவரது பிரசினைகளும் சிந்தனை நிர்ணயங்களும் ஒருபுறமிருக்க, அவர் ஓர் மனிதர் என்ற முறையில், அவரது தினசரி வாழ்க்கை எத்தகையதாயிருக்கிறது என்பதுபற்றிச் சிறிதறிய ஒவ்வொருவரும் ஆசைகொண்டிருந்தார்கள். பாரிஸுக்கு வந்த ஏனைய பிரபலஸ்தர்களைப்போலவே இவரும், தங்கள் துறைக்கு முற்றிலும் வேறுபட்ட விஷயங்கள் பற்றித் தமது அபிப்பிராயங்களைத் தெரிவிப்பார் என்று எதிர்பார்த்திருந்தார்கள். அவருக்கு அரசியல்பற்றி மிகத் திட்டமான கருத்துக்கள் உண்டு. இதனால், பிற்போக்கான கட்சியைச் சேர்ந்தவரும், கலகம் செய்வதை இயல்பாகவுடையவருமான ஜர்மன் மாணவர்கள், பற்பல சமயங்களில் அவரைத் தொந்திரவு செய்திருக்கிறார்கள். ஆதலால், பாமரஜனங்களும் விளங்கிக்கொள்ளக் கூடிய விசேஷ விஷயங்கள் எவையேனும் அவர் கூறக்கூடும் என்று நினைத்திருந்தார்கள்.

பிரஸ்தாப சமயத்தில், மிகப் பிரபலமான பத்திரிகைகளின் டஜன் கணக்கான நிருபர்கள் பாரிஸுக்கு வந்திருந்தார்கள். அவர்களுள் பெரும்பாலோர், புரொபஸர் ஈன்ஸ்டீன் தங்கியிருந்ததாகத் தெரியவந்த ஆடம்பரச் செலவற்ற ஓர் எளிய ஓட்டலில் காத்திருந்தார்கள். ஆனால், அதன் காரியஸ்தர்களை விசாரிக்கும் பொழுதெல்லாம் "புரொபஸர் ஈன்ஸ்டீன் வெளியே போயிருக்கிறார்" என்ற ஒரே பதிலே கிடைத்தது.

ஒருநாள், பொழுது புலர்ந்தவுடனே நான் அந்த ஓட்டல்போய்ச் சேர்ந்தேன். அப்பொழுது தான், சில நிமிஷ நேரம் காவலாள் எங்கோ போயிருந்தான். இந்த சமயத்தில், புரொபஸர் ஈன்ஸ்டீன் அறைக்கு டெலிபோன் மூலம் சமிஞ்ஞை செய்தேன்; எனது பெயரைத் தெரிவித்தேன். ஆனால், பெர்லின் வாசிகள் உச்சரிப்பு-விசேஷங்களுடன் ஜர்மன் பாஷையில், மிக நேசமான குரலில், நான் வியப்புறுமாறு பின்வரும் பதில் கிடைத்தது.

"கட் மார்கன்" என்று விளித்த புரொபஸர், "ஐந்து நிமிஷங்கள் பொறுங்கள். இதோ கீழே வருகிறேன். இருவரும் சேர்ந்து காலை யுணவு கொள்ளலாம்" என்றார்.

அவர் கூடத்திற்கு வந்து சேர்ந்தார். காலைக் காற்றின் குளிருக்குப் பாதுகாப்பாக அவரது மேலங்கியின் கழுத்துப்பட்டை (ஓவர்கோட் காலர்) மேலே தூக்கிவைக்கப் பட்டிருந்தது. கனவுகாண்பவரைப் போல அவர் சுற்று முற்றும் பார்த்தார்; என்னைக் கண்டார். என்னை வரவேற்றதற்காக, நான் வந்தனம் செய்தேன்.

விசேஷமான ஆச்சரியம் முகத்தில் இலங்க "நீங்கள் யார்?" என்று அவர் வினவினார்.

"சில நிமிஷ நேரத்திற்கு முன் டெலிபோனில் தெரிவித்தேனே" என்று, அவருக்கு ஞாபகப்படுத்தினேன்.

"ஸார்போன் வாசியான எனது நண்பர் டாக்டர் ஐஸ்ஸர் என்று உங்களை நான் நினைத்து விட்டேன்" என்று கூறிய அவர், ஏமாற்ற முற்றதாகத் தெளிவாகப் புலப்பட்டது.

சிலமனிதர்களாயின் இதேசம்பாஷணையை முறித்திருப்பார்கள்; ஆனால், புரொபஸர் ஈன்ஸ்டீன் மிக நம்பிக்கை வாய்ந்தவராயிருந்தார். ஆனால் அவர் இவ்வாறு செய்யவில்லை.

"நல்லது" என்று கூறிய அவர், "அது உங்கள் குற்றமல்ல. நானே உங்களுக்கு வாக்களித்துவிட்டேன், என்னுடன் வாருங்கள்" என்றார்.

இதன்பயனாக, சரித்திரப் பிரசித்தி பெற்ற ராயல்பாலேஸ் வீதியில் ஒரு சிறு காப்பிஓட்டலில், அதேபோல் பிரசித்திபெற்ற விஞ்ஞான (சயன்ஸ்) நிபுணரொருவருடன் என் காலையுணவு கொள்ளலானேன்.

அறிஞர் ஐக்கியத்திற்காக ஏற்பட்டுள்ள புதியஸ்தாபனத்தால் என்ன நன்மைகள் ஏற்படக்கூடும் என்று அவர் கருதுகிறார் என நான் வினவினேன்.

அவர் கூறிய பதிலாவது:—"இது வேறு நல்ல குறியேயாகும். ஒன் நதியின் இருமருங்கும் உள்ள மனிதர்களுக்கு நேசபாவத்தோடு வாழ்வதற்கான எண்ணங்கள் பரிசயமாகி வருவதாக அதுகாட்டுகின்றது. வெறும் அறிவு ஸ்தாபனமாக இருக்கவேண்டுமென்றே இது உத்தேசிக்கப் பட்டிருக்கின்றது. எனினும், அரசியல் துறையிலும் இதற்கு விசேஷ சக்தியுண்டு."

நான் வினவியதாவது:— "அறிவுத் துறையில் ஏற்படும் அபிவிருத்திக்கு அரசியல் முன்னேற்றத்தில் சம்பந்தமில்லையல்லவா?"

"நிச்சயம் சம்பந்தமுண்டு" என்று பதிலிறுத்த அவர் "அறிவுத்துறை முன்னேற்றம் அரசியலாலேயே கட்டுப்படுகின்றது. இதை மறுத்துச் சொல்வது, உண்மைகளை நோக்காமல்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்).

(கூ-ம் பக்கத் தொடர்ச்சி.)

கண்ணை மூடிக்கொள்ளுவதாகும். அறிவுக்கு அரசியலில் செல்வாக்குக் கிடையாது. இலெளகிக உரிமைகளும், உணர்ச்சிகளும், இச்சைகளுமே அரசியல் நிர்வாகத்திற்குத் தூண்டுதல் அளிக்கின்றன. உரிமைகளின் தூண்டுதல் நூற்றுக்கு முப்பது; உணர்ச்சி இச்சைகளின் தூண்டுதல் நூற்றுக்கு எழுபது" எனநவின்றார்.

"சயன்"ஸின் பயன்.

நான்:—"அறிவுக்கலைகளின் (சயன்ஸ்) பயன் என்ன? தேசங்களின் தலைவிதி நிர்ணயமாவதில், அவற்றின் தூண்டுதல் யாது?"

அவர்:—"ஒன்றும் கிடையாது அறிவுக்கலை (சயன்ஸ்) தூண்டும் அலுவல் யாதும் புரிவதில்லை"

நான்:—"ஆயின், அதன்பயன் யாது?"

அவர்:—"அறிவுக்கலையின் (சயன்ஸ்) உபயோகத்தைப்பற்றி நீங்கள் வற்புறுத்தலாகாது. அனுபவத்தில் தினசரி வாழ்க்கையில் என்ன உபயோகம் தன்னால் உண்டு என்பதைப் பற்றி அறிவுக்கலை (சயன்ஸ்(கவலைப்படுவதில்லை. அறிவுக்கலை, மனித சமூகத்திற்கு ஓர் நல்லவாளு சாபக்கேடோ என்பதுபற்றிப் பலமுறை விவாதிக்கப்பட்டுளது; இதுவரையில் ஒருவித முடிவும் செய்யப்படவில்லை. ஒன்றுமட்டில் நிச்சயம்—அறிவுக்கலையின்றியே மனிதர்கள்வாழ முடியும். உதாரணமாக, அறிவுக்கலையின்றியே, ஜப்பான் பல நூற்றுண்டுகளாக வாழ்ந்து வந்திருக்கின்றது. அறிவுக்கலைஞனுக்கு அறிவுக்கலையிலுள்ள காதல், காதலியிடம் காதலனுக்கு உள்ள பேரன்புக்குப் பெரிதும் நிகர்த்தது. நேர்த்தியான இளம்பெண் ஒருத்தியிடம் காதல் கொள்ளுவதில் ஏதாவது பயனுண்டா என்று நீங்கள் கேட்கமாட்டீர்கள்; கேட்பீர்களா? இதுபோலவே, அறிவுக் கலையிடம் உங்களுக்கு ஒரு தடவை காதல் உண்டாகிவிட்டால், அது ஏன் உண்டாயிற்று என்று நீங்கள் வினவமாட்டீர்கள். அறிவுக்கலைமிசை யுறும் காதல் வெள்ளத்தில் நீங்கள் மிக ஆழ்ந்து போகாவிட்டால், நீங்கள் ஓர் உண்மையான அறிவுக்கலைஞராக வியலாது.'

நான்:—"இந்தக் காதலால் களிப்புக் கிடைக்குமா?"

அவர்:—"இந்தக் கேள்விக்கு, நான் ஓர் பொதுவான பதிலுரைக்க முடியாது. நான் சொல்லக்கூடிய தெல்லாங்கூடி, எனக்கு அதனால் களிப்புக் கிடைக்கிறது. இதனால், மனிதவாழ்க்கைக் கியல்பான அம்சங்களான குடும்பக் காரியங்கள் போன்றவற்றில் எனக்குச் சிரத்தையில்லை என்று கருதலாகாது. எனினும், ஒரு மனிதனது வாழ்க்கையில், சில விஷயங்களிலுள்ள சிரத்தைகள் பெரும் பங்கு பெறுகின்றன. அவற்றிற்காக, நீங்கள் வேறு பொருள்களைத் தியாகம் செய்யவேண்டியதாகும்."

கலைஞர் கலைக்காதல்.

நான்:—"அழகுக்கலை, (ஆர்ட்)இலக்கியம் (லிடரேச்சர்) ஆகியவற்றைப் பற்றி உங்கள் கருத்தென்ன?"

அவர்:—"அழகுக்கலை, அறிவுக்கலையினும் சிறிது வித்தியாசமானது."

நான்:—"அது இதனினும் உயர்ந்ததா? இதனினும் அதிகக் களிப்பைத் தருவதா? அறவாழ்வுக்கு அதனால், அதிகப் பயன் அண்டா?"

அவர்:—"இவ்வாறெல்லாம் அழகுக்கலை இருக்கவேண்டுமென்பது அவசியமல்ல. அறநெறிபுகட்டும் நல்ல அழகுக் கலையும் உண்டு; அதனைப்புகட்டாத நல்லழகுக் கலையுமுண்டு. ஆனால், அழகுக் கலையிலுள்ள முக்கிய இன்பம், அழகுக்கலைஞனுக்குக் கிடைப்பதேயாகும். அவர் வாழ்வை யனுபவிக்கும் இன்பம் அதனால் பெருகுகின்றது."

நான்:—"சாமானியப் பாமர மனிதனைவிட, அறிவுக்கலைஞன் அதிகக் களிப்புடையவனா?"

அவர்:—"நான் அவ்வாறு நினைக்கவில்லை. அறிவுக்கலைப் பயிற்சி யற்ற சாமானிய மனிதருக்கு இல்லாத சந்தேகங்கள் பல, அறிவுக்கலைஞனை அனவரதமும் வேதனைசெய்கின்றன."

நான்:—"நீங்கள் கண்டுபிடித்த தத்துவத்தைப்பற்றி உங்கள் கருத்தென்ன?"

அவர்:—"அதைப்பற்றி எனது கருத்தென்ன வென்பதை விளக்குவது கடினமென நான் அஞ்சுகிறேன்"

நான்:—"அதைப்பற்றி உங்களுக்கு ஏதாவது ஐயங்களுண்டா?"

அவர்:—"திட்டமான ஐயங்கள் இல்லை. ஆனால், உங்கள் உழைப்பிலும், அதன் பயன்களிலும் தவறுகள் உங்களுக்குத் தெரியாமலே நுழைந்திருக்கக்கூடும் என்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்."

நான்:—"அங்ஙனமாயின்?"

அவர்:—"உங்கள் அலுவலில் நீங்கள் திரும்பத்திரும்ப உழைக்கவேண்டும். மொத்தத்தில் சரியாயிருக்கக் கூடிய ஓர் கருத்து உங்களுக்கு இருக்கக்கூடும். ஆனால், சிறு விவரங்களில் பிழைகள் ஏற்பட்டிருப்பது உங்களுக்குத் தெரியலாம். இது எப்படிப்பட்டதெனில், ஒரு இரத்தினக் கம்பளம் இருக்கிறது; அதன் நெசவில் ஏதாவது குற்றம் ஏற்பட்டிருக்கக்கூடும். இதற்காக, கம்பளம் பூராவையுமே நாம் பிரித்துவிட வேண்டுமா? கூடாது; ஆனால், இதேமாதிரியான இன்னோர் கம்பளத்தை நீங்கள் நெய்யும் பொழுது, அந்தப் பிழை மறுபடியும் உண்டாகாமல் தவிர்க்க நீங்கள் முயலவேண்டும். மனிதனால் சிருட்டிக்கப் படும் பொருள்கள் எவ்வளவு தூரம் குற்றமற்றதாயிருக்க முடியுமோ அவ்வளவு தூரம் பழுதற்றதொரு கம்பளத்தை நெய்யும் சக்தி உங்களுக்கு உண்டாகும் வரையில், நீங்கள் திரும்பத் திரும்ப நெய்துகொண்டே இருக்க வேண்டியதுதான். திரும்பத் திரும்பச் செய்வதால் அதிக நிச்சயமும் அதிக விளக்கமும் ஏற்படுகின்றன. முதல் கம்பளத்தில் ஏற்பட்ட நல்ல இணைப்புகளையெல்லாம், உங்களுடைய மற்றக் கம்பளங்களிலும் உண்டாக்கி விடுகிறீர்கள். சத்தியத்தைப் போல், அவை தாமே நிலைத்து விடுகின்றன. சத்தியத்திற்கு, ஆதாரவு வேண்டியதில்லை; அது தனக்குத் தானே ஆதாரவாயிருக்கிறது. ஆனால், அதை நீங்கள் பிறருக்குத் தெரிவிக்க வேண்டும்; பலரிடமும் பரப்பவேண்டும்; அதைக் காணமுயன்று கொண்டிருந்தும் அதனைக் காணுதிருந்து வருவோருக்கு அதனை உபதேசிக்க வேண்டும்."

நான்:—"பண்டிதரே! உபாத்திமைத்தொழிலில் உங்களுக்கு விருப்பமுண்டா?"

அவர்:—"உண்டு; ஒவ்வொரு மாணவரையும் தனித்தனி உபாத்தியார் தெரிந்துகொள்ளக் கூடிய இரண்டாந்தர அல்லது உயர்தர (ஸெகண்டரி அல்லது அட்வான்ஸ்டு) கலாசாலைகளில் உபாத்தியாயராயிருக்க எனக்கு விருப்பமுண்டு. ஆனால், பெரும் பிரசங்க மேடைகளில் இருந்துகொண்டு அறிமுக மற்ற மனிதர்களடங்கிய சபைகளின் முன் பிரசங்கங்கள் செய்வதில் எனக்கு விருப்பமில்லை. ஓர் பெருங் கூட்டத்தில் உங்களுக்கும் நீங்கள் பிரசங்கிக்கும் சபையோருக்கும் ஏதும் உறவு இருப்பதில்லை."

நாங்கள் எங்கள் காலையுணவை முடித்து, பாலேஸ் ராயல் வீதியைச் சுற்றி நடந்தோம்.

"வெளியே போகும்வழி எங்கே?" என்ற புரொபஸர் ஈன்ஸ்டீன், "அதனை நான்கண்டுபிடிக்க முடியவில்லை" என்றார்.

வெளியேபோகும் வழியைக் கண்டுபிடிப்பதில் நான் அவருக்கு ஒத்தாசை புரிந்தேன். அவர் என்னுடன் கைகுலுக்கி, எனக்கு வந்தனம் செய்து எனது சிரமத்திற்கு மன்னிப்பு கேட்கும் தொனியில், "வழிகண்டு பிடிப்பது இந்த இடத்தில் மிகக் கஷ்டமாயிருக்கிறது" என்றார்.

பரஸ்பரக் கவர்ச்சி (ரெலடிவிடி) யைக் கண்டுபிடித்த நிபுணர்! நமது காலத்தில் மிகச் சிரமமானதொரு சித்தாந்தத்தைக் கண்டு பிடித்த ஓர் மனிதருக்கு, தினசரி வாழ்க்கையில் நடக்கும் ஓர் எளிய சங்கதி, மிகச்சிரமமாயிருக்கிறது வியப்பன்றோ?.

நமது சுகாதாரப் பகுதி.

நீராடுதலின் நன்மைகள்.

மக்கள் வாழ்க்கை இன்பமாக விருத்தற்கு அவர்கள் உடல்நலன் பெற்றிருத்தல் இன்றியமையாததென்று அனைவரும் அறிவர். இவ்வுடல் நலன் குன்றாதிருக்க ஒவ்வொரு உறுப்புக்களும் அவற்றின் வேலைகளை சரியாகச் செய்துவரல் வேண்டும். அஃதோடு அவ்வேலைகள் உடம்பின் தேவைக்குத் தகுந்தபடியாகவும் இருத்தல் அவசியம். உடல் நலனுக்கு தூயவாழ்க்கை,தூயகாற்று, நல்லுணவு, சுத்தநீர், மிதபோகம், உடற்பயிற்சி முதலியன இன்றியமையாதன.

முதலாவதாக, தூயவாழ்க்கையைக் கவனிப்போம். வாழ்க்கை தூயதாக விருத்தற்கு உடலும் உளமும் ஒன்றுபோல் தூயதன்மை பெற்றிருத்தல் அவசியம். சிலர் உடல் மட்டும் சுத்தமாகவிருந்தால் போதுமெனக் கருதுகின்றார்.வேறு சிலர் உளம்தான்சிறந்தது. ஆதலால் உளத்தூய்மையேவேண்டும், உடல் சுத்தமாக விருக்கவேண்டு மென்பதில்லை என்று கூறுகிறார்கள். ஆனால் உடலும் உளமும்ஒன்றுபோல் தூயதன்மைபெற்றிருத்தல் இன்றியமையாததென்பதை அறிஞர் எவரும் மறுக்கார்.இவ்வுடல் சுத்தம், அகச்சுத்தம் புறச்சுத்தம் என்று இருவகைப்படும். அவற்றுள் புறச்சுத்தத்தை ஈண்டு கவனிப்போம்.

உடலின் வெளிபாகம் சுத்தமாக விருத்தற்கு நீராடல் மிக அவசியம். இந்நீராடலால் உடம்பு எவ்வாறு சுத்தமாகின்றதென்பது அனைவரும் அறிந்தேயிருக்கின்றார்கள். நீராடுதலால் உடம்பின்மீது படிந்துள்ள மாசுகளும் அவற்றோடு கலந்துறையும் அணுப்புழுக்களும் அகற்றப்படுகின்றன.

இன்னும் உடம்பின் தோலில் அளவற்ற துவாரங்கள் இருக்கின்றன. இவற்றின் வாயிலாக உடம்பின் உட்பாகத்துள்ள விஷப்பொருள்கள் யாவும் வெளியே அனுப்பப்படுகின்றன. எனவே, இவ்வழியாக உடம்பு உட்பகுதிகளை சுத்தஞ்செய்து கொள்கிறது. தோலின் மேற்பகுதி அழுக்கினால்—அல்லது எண்ணெய்ப் பசைபோன்றவற்றால்—அடைபட்டிருந்தால், தோலின் மீதுள்ள துவாரங்களும் அடைபட்டுப் போகும். எனவே, நீரால் உடம்பின் மேற்பகுதி சுத்தம் பண்ணப்படின் தோலிலுள்ள துவாரங்கள் திறக்கப்படுதலோடு, அவற்றின் வேலைகளும் சரியாக நடக்க வசதி ஏற்படுகின்றது.

மேலும், மிகுதியாக ஆடைகளை அணிந்து கொள்வதால் உடம்பின் தோல் தமது வேலையைச் செய்ய இயலாது போகின்றது. வியர்வை மிகுதியாக வெளிவருவதே தோல் தமது வேலையைச் சரியாகச் செய்கிறது என்பதின் அறிகுறி. எனவே, போதிய அளவு வியர்வை இல்லாதவர் நல்ல உடல் நலத்தோடு இருப்பதாகக் கூறமுடியாது. ஆதலால், நீராடுவதால் உடம்பின் மேற்பகுதியும், சிறப்பாக தோலும் சுத்தமடைகின்றன. இரண்டாவதாக, உடம்பின் உறுப்புக்கள் வேகமுடன் நன்றாக வேலைசெய்கின்றன.

இனி, நீராடுதல் சாதாரணமாக தண்ணீரிலும் வெந்நீரிலும் நடைபெறுகின்றது. வெந்நீர் தண்ணீரைவிட உடம்பிலுள்ள அசுத்தங்களை நன்கு அகற்றுகின்றது. வெந்நீரால் தோலில் படிந்துள்ள எண்ணெய்ப் பசைகள் நன்கு கரைந்து விடுகின்றன. உடம்பின்மீது வந்துறையும் அணுப்புழுக்களும் இறந்து விடுகின்றன; உடம்பிற் கலந்து பலவித நோய்களுக்குக் காரணமாக விருக்கும் அசுத்த பொருள்களை நன்றாக வெளிப்படுத்தற்கு அதிகநேரம் வெந்நீரில் குளித்தல் அவசியம். சீழ்க்கட்டும்படி செய்யக்கூடிய விஷப்பொருள்கள் உடம்பில் தங்கியிருக்கச் செய்யும் சீதளம், கபவாதக்காச்சல், சளிக்கட்டு முதலிய நோய்வாய்ப்பட்டு வருந்துபவர் வெந்நீரில் குளிப்பதால் நலம்பெறுகிறார்களெனச் சொல்லப்படுகிறது.நீண்டநேரம் வெந்நீரில் குளித்தல் இத்தகைய தொல்லைகளை அகற்றுகின்றது. மேற்கூறியவற்றில் நற்பயனை அளிப்பதாயினும், வெந்நீராடல் எப்போதுமே பழக்கத்தில் கொண்டிருப்பின் சக்திக்குறைவளிக்கின்றது.

சாதாரணமாக,தண்ணீரில் குளிக்கும்போது சோப்பை உபயோகிப்பதால் வெந்நீரால் கிடைக்கும் சில நன்மைகள் கிடைக்கின்றன. சோப்புக்கு எண்ணெய் அம்சமான அசுத்தங்களைக் கரைக்கும் தன்மையிருக்கின்றது. இவ்வாறு கரைக்கப்பெற்ற அசுத்தங்கள் தண்ணீரில் குளிப்பதால் நன்கு அகற்றப்பட்டு தோலும் சுத்தமாகின்றது.

ஒவ்வொரு நாளும் உடம்பில் நல்லவியர்வை உண்டாகும்படி பயிற்சிசெய்து பின்னர் உடம்பை சுத்தஞ்செய்துகொள்வதற்கு ஏதாவது ஒருமுறையைப் பின்பற்றி குளித்தல் அவசியம்.

வெந்நீரில் குளிப்பதோடு, சிலர் வெந்நீரில் நனைத்த துணியால் உடம்பைத் தேய்த்து நீராடுகின்றார்கள். பயிற்சிசெய்து பின்னர் குளிர்ந்த நீரில் ஆடுதல் உடம்பின் உறுப்புக்கட்கு நல்ல ஊக்கத்தை யளிக்கின்றது. இரத்த ஓட்டமும் அதிகரிக்கின்றது.

நல்ல நீரில் குளித்தலோடு, வசதியேற்படும் போதெல்லாம் உப்பு நீரில் ஆடுதலும் நன்று. இவ்வாறு கடல்நீர் முதலியவற்றில் குளிப்பதால் உடம்பின் தோல் கெட்டிப்படுவதோடு, ஊக்கமாக வேலைசெய்யும் உணர்ச்சியும் உண்டாகின்றது.

ஆதலால், சிலர் நீராடும்போது தண்ணீர் சேமித்துவைத்திருக்கும் தொட்டியில் சிறிது உப்பையும் கலந்துகொள்ளுவதுண்டு.

கைகளைத் தண்ணீரில் அடிக்கடி நனைத்துக்கொண்டு உடம்புமுழுதும் தேய்த்து நீராடுதலையும் சிலர் ஓர் முறையாகக் கொண்டுள்ளார். பின்னர் இவ்வாறு நனைந்த உடம்பை நன்றாகஉணர்ந்து போகும்படி தேய்த்தலுமுண்டு.

இம்முறையினை கையாண்டு உடம்பில் கெட்ட நாற்றம் வரும்போது குளித்தல் மிகவும் அவசியமாகும். (சுசீலர்.)

கடிதங்கள்.

கோன்னையூர் கீரணிப்படி மாரியம்மன் திருவிழாக்கள்.

கூழிபிரைச் சிவனடியார் திருக்கூட்ட பிரசார ஏற்பாடுகள்.

நமது திருக்கூட்டச் சார்பில் ஷை திருவிழாக் காலங்களில் ஷை ஆலயங்களிலும் இல்லங்களிலும் நடைபெற விருக்கும் பல்லாயிரக் கணக்கான ஏழை ஆடுகோழிகளின் உயிர்களைக் காப்பாற்றும் பொருட்டு நாளது பங்குனிமீ கஅஉ முதல் பல ஊர்களில் பிரசாரங்கள் நடைபெறும். இயன்ற பல ஊர்களில் ஜீவகாருண்ய நிதிமன்றமும் நடைபெறுமென திருக்கூட்டத்தின் காரியதரிசி அறிவிக்கிறார்.

தேவகோட்டை.

சரஸ்வதி வாசகசாலை:— இவ்வாசகசாலையின் மாதக்கூட்டம் இம்மதி எட்டாம் நாள் வெள்ளிக்கிழமை (உக-ரு-ஙo. முற்பகலில் ஸ்ரீ சொர்ணமூர்த்தி பெண்பாடசாலை மாணவிகள் கடவுள் வணக்கம் கூற ஆரம்பமாகியது. சோம. இராமநாதன் அவர்கள் "பெண்கல்வியும் தனவணிகரும்" என்பதுபற்றியும் ஸ்ரீ முருகன் அவர்கள் "தெய்வ நம்பிக்கை" என்பதுபற்றியும் ராம. ராஜேஸ்வரி, ராம. சிலம்பாயி (இருமாணவிகள்) "கட்பு" "பெண்களின் அணிகலன்" என்பதுபற்றியும் சொற்பெருக்கிட்டார்கள். பின்னர். "பாரததேசமென்று" "செந்தமிழ் நாடெனும் போதினிலே" என்ற பாரதியார் கீதங்கள் மாணவிகளால் பாடப்பெற்று வந்தனவாழ்த்துடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது எனக் காரியதரிசி எழுதுகின்றார்.

மல்லாயின் தீவிபத்து.

க-ரு-ஙo பகல் உ-மணிக்கு யெக்காரணத்தை முன்னிட்டோ இந்நகரிலும் இவ்வூர்க்கருகிலுள்ள உ-ரு சின்னக் குடிசைகளிலும் தீப்பற்றிக் கொண்டிருக்கும் போது ஜனங்கள். தீனை அணைக்க தீவிர முயற்சி யெடுக்கும் தருணம் அதிகமான சுழல்காற்று வீசியபடியாலும் தண்ணீர் வசதியின்மையாலும் வெய்யலின் கொடுமையாலும் ஜனங்கள் தணலருகில் சென்று ஒன்றும் செய்ய இயலவில்லை. அதன்மேல் தன்மேல் தன் சுற்றுப்புறத்திலுள்ள வீடுகளில் பிடித்ததுடன் வாயு பகவான் செய்த கொடுமையினால் பஜாரிலும் தாவிபிடித்து விட்டது. பிடித்ததும் அதிலுள்ள ஜனங்கள் அல்லோல கல்லோலப்பட்டு அதினின்றும் தப்புவித்து ஓடத் தலைப்பட்டனர். அதன்மேல் மற்றஜனங்களெல்லாம் வீட்டிலுள்ள சில சாமான்களை யெடுத்தும் யெடுக்காமலும் குழந்தைகளைக் கட்டிக்கொண்டும் சிறு குழந்தைகளை தூக்கியும் அயலூர்களுக்கு பிழைத்தோம், பிழைத்தோமெனவும் பாமியர்கள் 'அம்மலே. அம்மலே' யென்ற கூக்குரலுடனும் ஓடிப் பிழைத்தார்கள்! காற்று அன்று பூராவும் நிற்காது அடித்துக் கொண்டிருந்தபடியால் ஊருக்குள்ளும் நுழைந்து சுமார் உOO வீடுகள்வரை அக்னிக்கி ஆகுதிஆகி விட்டன. ஜனங்களொன்றும் சேதப்படவில்லை. பஜாரிலும் சொந்தவீடுகளிலும் வைத்திருந்த வியாபாரிகளின் சரக்கு அரிசிமூட்டை துவரை பாசிப்பயர், உளுந்து மொச்சை கடலை புகையிலை, மற்ற மிதாசாமான்களும் சுமார் ௫-லெட்சம் ரூபாய்பெருமான சொத்துக்கள் தீக்கிரையாகி யிருப்பதாகபலரும்கூறுகிறார்கள். ஜனங்கள் ரெம்பவும் கஷ்டநிலைமையிலிருந்து கொண்டிருக்கிறது. கடவுள் தானிவர்களை கண்பார்த்து ரக்ஷிக்குமாறு பன்முறையும் வேண்டுகிறேன் என்று வீர. ஆ. மலையப்பன் அறிவிக்கிறார்.

கோநகர்.

மின்சாரத் திறப்புவிழா—கஉ-ரு-ஙo தேதி மாலை ௫-மணிக்கு முன் பல நாட்களாக ராமச்சந்திரபுரத்திலிருந்து இவ்வூருக்கு எலக்ட்ரிக் நாண்டு விடுவதென நிச்சயித்து அதற்காம் பொருள்கள் பல இவ்வூர் நகரத்தார்கள் உதவியளித்து வேலைகள் யாவும் முடித்து பி. கு. கா. நாகப்செட்டியார், இஞ்சினியர் ராஜகோபாலய்யங்கார், முதலிய பிரமுகர்கள் ராமச்சந்திர புரத்திலிருந்து இவண் விஜயஞ்செய்தும் இவ்வூர் நகரத்தார் பலரும் ஒன்றுகூடி பி. கு. கா. நாகப்ப செட்டியாரின் அக்கிராசனத்தின்கீழ் ராஜகோபாலய்யங்காரவர்கள் கார்பொரேசன் சரித்திரத்தை சொன்னதும் பல அன்பர்கள் நன்றி கூறுதலுடனும் கடைசியில் மைசூர் ஜவுளி வர்த்தகசாலை டைரக்டர் சுப்பய்ய செட்டியாரவர்களால் நகரத்தாரின் சார்பாக நன்றி கூறப்பட்டு அனைவருக்கும் மாலையிட்டதும் நாகப்பசெட்டியாரவர்கள் அனைவருடனும் போய் சுவிச்சை தட்டினார்கள். விளக்குகள் யாவும் ஒளி தந்தன. பிறகு கார்பொரேசனுக்கு ஜே சப்தம் ஒலித்தும் அனைவருக்கும் ரோஜாபுஷ்பம் சந்தனதாம்பூலம் வழங்க விழா இனிதே முடிந்தது. இவ்விழா முடிந்ததும் கோழி ஒன்று பலி கொடுத்தானது யாவர் மனதையும் துன்பக் கடலில் ஆழ்த்தியது என நேரில் கண்டவர் கழறுகிறார்.

ஏல நோட்டீஸ்.

காரைக்குடி முனிசிபல் சுங்கச் சாவடிகளில் 1930—31-வருஷத்துக்கு சுங்கம் வசூலிக்கும் பாத்தியதையை 1930-வரு மார்ச்சு-மீ 27-உ வியாழக்கிழமை மாலை 3-மணிக்கு காரைக்குடி முனிசிபல் ஆபீசில் பகிரங்கமாக ஏலம் போடப்படும்.

ஆவி. பழ. சிதம்பரம் செட்டியார்,
சேர்மென்
முனிசிபல் ஆபீஸ், காரைக்குடி.
19—3—30

நோட்டீஸ்

தேவகோட்டை டி.மு.கோர்ட்டு
1929வரு S. C. No. 338.

வாதி:—
ராம. க. அரு. அருணாசலம் செட்டியார்.

பிரதிவாதி.
தொப்புளா னென்ற சாத்தன்.

இந்த நம்பர் வாதிக்குப் பிரதிவாதி அக்ஷயவரு ஆடிமீ உஉ-க்கு17-7-26உயில் ரூ 135-க்கு எழுதிக்கொடுத்த புரோநோட்டின் பேரில் வியாஜித்து, 24—3—30உ வாய்தா யேற்பட்டிருப்பதால், ஷை வாய்தாவில் பிரதிவாதி ஆஜராகி தன் எதிர்வாதத்தைத் தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால்ஒருதலைப்பக்ஷமாகத்தீர்ப்பாகி விடுமென்பதை.இதன்மூலம் அறிவித்திருக்கிறது.

வாதிவக்கீல்
S. கிருஷ்ணமூர்த்தி அய்யர்
18—3—30
தேவகோட்டை.

Reg. No 1509. (12 Pages) Tel: "Oolian"

ஊழியன்

SUBSCRIPTIONS:
Annual subscription Rs. 5
Half yearly „ Rs. 3
Foreign, Annual „ Rs. 6

ADVERTISEMENTS:
One inch, S. C, per insertion As 8
Court Notices, per inch Re 1
Long standing advertisements given concessions.

The "Oolian," a Nationalist Weekly.

Editor: Raya. Chockalingan.

Truth Persists. Service Shines.

Vol. X. Karaikudi—Tuesday, March 25th 1930. No. 27.

ராய. சொக்கலிங்கனல் காரைக்குடி "ஊழியன்" அச்சுக்கூடத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

END OF ISSUE